## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.11.2021 அனைத்து புனிதர்கள் பெருவிழா - விழா 02

02.11.2021 இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவு - திருப்பலி 03

04.11.2021 புனித சார்லஸ் பொரோமெயோ நினைவு - திருப்பலி 04

07.11.2021 பொதுக்காலம் 32ம் ஞாயிறு - திருப்பலி 05

09.11.2021 இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா-திருப்பலி 07

11.11.2021 தூர் நகர்ப் புனித மார்ட்டின் - திருப்பலி 08

13.11.2021 அருளாளர் ஆர்த்திமெதே சாத்தி - திருப்பலி 09

14.11.2021 பொதுக்காலம் 33ம் ஞாயிறு - திருப்பலி 10

15.11.2021 அருளாளர் மதலேன் மொரானோ - திருப்பலி 12

18.11.2021 புனிதர்கள் பேதுரு, பவுல் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு - திருப்பலி 13

21.11.2021 கிறிஸ்து அரசர் பெருவிழா - திருப்பலி 14

23.11.2021 புனித முதலாம் கிளமெண்ட் - திருப்பலி 16

28.11.2021 திருவருகைக் கால முதல் ஞாயிறு - திருப்பலி 17

30.11.2021 புனித அந்திரேயா திருத்தூதர் விழா - திருப்பலி 18


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


இயேசுவே நம் அரசர் 20

இறப்பு என்பது முடிவல்ல... 22

அருளாளர் ஆர்த்திமெதே சாத்தி மற்றும் மதலேன் மொரானோ - வாழ்வு தரும் பாடம் 24

திருஅவைச் செய்திகள் 27

# பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.11.2021 அனைத்து புனிதர்கள் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

I. திவெ. 7: 2-4, 9-14 II. 1யோவா. 3: 1-3 மத். 5: 1-12

இறையேசுவில் இனியோரே, உங்கள் அனைவருக்கும் அனைத்து புனிதர்களின் திருவிழா வாழ்த்துக்கள். தனக்காகவும் பிறருக்காகவும் வாழ்கிறவன்தான் மனிதன், பிறருக்காகவும் கடவுளுக்காகவும் மட்டும் வாழ்கிறவன் புனிதன். நாம் ஒவ்வொருவரும் புனிதர்களாக வாழ, இன்றைய நாளில் இறைவன் நம்மை அழைக்கின்றார். புனிதர்கள் என்பவர்கள் இவ்வுலகில் இறைவனுக்கு ஏற்புடையவர்களாக, நம்பிக்கையில் உறுதிக்கொண்டு மற்றவர்களுக்கு இறைவனைக் காண்பித்து இன்று விண்ணக வாழ்வைச் சுவைத்துக் கொண்டிருப்பவர்கள். இம்மண்ணில் புனிதர்களாக யாரும் பிறப்பதில்லை, மனிதர்களாக பிறந்து புனித நிலைக்குத் தங்களையே மாற்றிக் கொண்டவர்கள்தான் புனிதர்கள். நமதாண்டவர் மார்த்தாவிடம் "ஒரே ஒரு காரியம் தேவை" என்றாரே, அதற்குரிய அழுத்தம் தந்து வாழ்ந்து காட்டியவர்கள் தான் புனிதர்கள், கிறிஸ்துவின் அன்பின்றி யார் என்னை பிரிக்க இயலும்? என்று சவால் விட்டு வாழ்ந்தவர்கள்தான் புனிதர்கள்.

இயேசுவின் பின்னால் நானும் செல்வேன் திரும்பிப் பார்க்க மாட்டேன் என்ற குறியீட்டை எட்டியவர்கள் தான் புனிதர்கள். என்னில் வாழ்வது கிறிஸ்து என்று வாழ்ந்துக் காட்டியவர்கள் தான் புனிதர்கள். எனது உடலிலுள்ள தழும்புகள் நான் இயேசுவுக்கு அடிமை என்று மார்த்தட்டி வாழ்ந்தோர்தான் புனிதர்கள். இப்புனிதர்களின் பெருவிழாவின் முக்கிய நோக்கம் புனிதர்களை மகிழ்ச்சிப்படுத்துவதோ, பெருமைப்படுத்துவதோ அல்ல, மாறாக, நாமும் இவர்களைப்போல வாழத் திருஅவை அறிவுறுத்துகிறது. எனவே விண்ணகத்தை நோக்கியுள்ளப் பயணத்தில் நாம் புனிதர்களாக மாற முயற்சி எடுப்போம். அனைத்து புனிதர்களிடமும் இன்றும் என்றும் செபித்து புனித நிலைக்கு நம்மை மாற்றிக்கொள்ள இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் நம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரையும் உம்முடைய வல்லமையான கரங்களினால் ஆசீர்வதித்து இவர்கள் தூய கருவிகளாக வாழும் அருளைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய்மையே உருவான இறைவா, அனைத்து புனிதர்களின் திருவிழாவினை சிறப்பிக்கும் நாங்கள் அனைவரும் அவர்களின் நல்வாழ்வின் முன்மாதிரிகளை பின்பற்றி நடக்கவும், அவர்களைப்போல

தியாகமும், துணிவும், பக்தியும் நிறைந்த வாழ்வை பின்பற்றி வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கம் நிறைந்த இறைவா, இன்றைய காலக்கட்டத்தில் ஏற்பட்டுள்ள தொற்று நோய் மற்றும் இயற்கைச் சீற்றங்கள், கல்வி நிலையங்களுக்கு ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள் இவைகளிலிருந்து மாற்றம் ஏற்பட்டு, இயல்புநிலையை அடைவதன் வழியாக நன்றியோடு புகழ்ந்திடும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 02.11.2021 இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவு திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. சாஞா. 3: 1-9 II. உரோ. 5: 5-11 யோவா. 6: 37-40

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று நாம் இறந்த ஆன்மாக்களுக்காக செபிக்கவும், விழாவினைக் கொண்டாடவும் ஒன்று கூடியிருக்கின்றோம். இச்செயல் இறைவனுக்கு உகந்ததே. இறந்த பின்பு ஆன்மாவின் நிலை என்ன? நாம் ஏன் அவர்களுக்காக செபிக்க வேண்டும், என்று சிந்திப்போம். ஒருவர் மரணிக்கும்போது அந்த கடைசி நிமிடத்தில் கடவுளைச் சார்ந்து அவரை தேர்ந்துக்கொண்டு மரிப்போமேயானால் அவர் கடவுளின் இரக்கம் பெற்றவராவார். இறப்பவர் புண்ணிய நிலையில் இருந்தால் விண்ணகமும், பாவ நிலையில் செய்த பாவத்திற்கு பரிகாரம் செய்யாத நிலையில் இருந்தால், இறந்து துன்புறும் நிலைக்கும், கடவுளை மறுத்த நிலையிலோ அல்லது சாவான பாவத்திற்கு மனம் வருந்தாமல், மன்னிப்பு வேண்டாமல், இறைவனை தேர்ந்துக்கொள்ளாமல் மரித்தால் இறை இரக்கம் பெறாமல் போகிறார். இப்படிப்பட்டவர்களுக்கு செபிப்பது பயனற்றது, கடவுளின் இரக்கம் பெற்றவர்களுக்கு மட்டுமே நாம் செபிப்பது பயன்தரும். இதை நாம் மன்னிக்க மறுத்த பணியாளர் உவமையில் புரிந்துக்கொள்ளலாம் (மத். 18:21-35)

"விண்ணகம் தூயது" அங்கே ஒருவர் நுழைய வேண்டுமானால் அவர் முற்றிலும் தூய்மை உள்ளவராக இருக்க வேண்டும். "தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார்" (எபி. 12:14) இப்படி இறந்தவர்களை தூய்மைப்படுத்தும் இடம்தான் இறந்து துன்புறும் நிலை (தூய்மைப்படுத்தும் இடம்) இறந்து துன்புறும் நிலையில் இருப்பவர்களால் பாவத்திற்கு பரிகாரமாக நன்மை செய்யவோ, இரக்கச் செயல் செய்யவோ இயலாது. கடவுளைக் காணவும் இயலாத நிலையில் துன்புறுவர். நாம் அவர்களுக்காக செபிக்க வேண்டும், திருப்பலி ஒப்புக்கொடுக்க வேண்டும், சிறப்பாக நாம் இறந்தவர்களின் பாவங்களை மனதார மன்னிக்க வேண்டும். அப்போது இறைவன் நமது பரிந்துரைகளையும் இரக்கச் செயல்களையும் ஏற்று அவர்களை விடுவிப்பார். இதை (மத். 25:31-46) புரிந்துக் கொள்ளலாம்.

நிலைவாழ்வை பெறுவதற்கு நாம் வாழும் இந்த காலங்களை முற்றிலும் பயன்படுத்துவோம். நமக்கு முன் இறந்துபோன நம் மூதாதையர், குடும்பத்தார், யாரும் நினையாத ஆன்மாக்கள், குருக்கள், ஞானப்பெற்றோர் என நம் நிலைக்குத் தகுந்தவாறு அவர்களுக்காக செபிப்பதை நிறுத்த வேண்டாம். இறந்த ஆன்மாக்களுக்காக செபிப்பது கிறிஸ்தவனின் கடமை என்பதை உணர்ந்தவர்களாய் உருக்கமுடன் மனம் உவந்து இப்பலியை இறந்தோருக்காக ஒப்புக் கொடுத்துச் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வளிக்கும் இறைவா, திருஅவையின் நம்பிக்கையின்படி அவர் நிலையில் மரித்தோர், குருக்கள், துறவறத்தார் எங்களுக்கு ஞான வழிகாட்டிய அனைவரது ஆன்மாக்களும் உமது இரக்கத்தினால் நிலைவாழ்வை அடைய உம்மை மன்றாடுகிறோம்.

2. நிறை ஒளியாம் இறைவா, எங்களது பங்கில் நம்பிக்கை விதைத்து இறந்துபோனவர்களுக்காகவும், அனைத்து குடும்பங்களிலும் இறந்துபோன ஆன்மாக்களுக்காகவும், எங்கள் பங்குகளில் கோவில்களில் பணியாற்றி மரித்த அனைவருக்கும் நிலைவாழ்வை அளித்து உமது பராமரிப்பில் பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆறுதலின் ஊற்றே எம் இறைவா, எங்கள் குடும்பங்களில் இறந்துபோன பெற்றோர், உடன்பிறந்தோர், உற்றார் உறவினர்கள் எங்கள் முன்னோர்கள் மற்றும் யாரும் நினையாத ஆன்மாக்கள் இவர்கள்மீது உமது திருமுக ஒளிவீசவும், வான்வீட்டில் உம்முடன் வாழும் அருளை நிறைவாக அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 04.11.2021 புனித சார்லஸ் பொரோமெயோ நினைவு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இத்தாலியில் பிறந்த இவர் இளமையிலேயே குருத்துவ நிலையை நாடினார். நாட்டின் சட்டங்களையும், திருஅவையின் சட்டங்களையும் கற்று அறிஞர் என்னும் பட்டத்தைப் பெற்றார். இவரது நெருங்கிய உறவினர் ஒருவர் அந்த ஆண்டில் திருத்தந்தையானார். அவர் இவரை கர்தினாலாகவும், மிலான் நகரின் பேராயராகவும் ஆக்கினார். அப்பொழுது இவருக்கு வயது 23. திருஅவைக்கு இவர் பல நன்மைகள் செய்தார். திரித்தெந்தின் பொதுச்சங்கம் வெற்றியுடன் முடிய பேருதவி செய்தார். கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே நடுவராயிருந்து அநேக பாவிகளை கடவுளோடு இணைத்து வைத்தார். நாட்டில் கொள்ளை நோய்ப் பரவியது, அப்பொழுது இவர் தம் மக்களின் பாவங்களுக்காக கடவுள் மக்களைத் தண்டிக்கிறார் என்று அறிந்து தம்மையே பலிப்பொருளாக கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கிறார். கொள்ளை நோய் காலத்தில் நோயாளிகளுடனும்

சாகக் கிடந்தவர்களுடனும் தங்கி அவர்களுக்கு பேருதவி செய்யும்படி தம் உடைமைகளையே கொடுத்தார். 1584ம் ஆண்டு நவம்பர் 3ம் தேதி புனிதர் இறந்தார். "கடவுளது பிரசன்னத்தில் வாழ பெரும் முயற்சிகள் செய்" என்ற புனிதரின் வாக்கிற்கேற்ப நாம் இந்த திருப்பலி வழியாக கடவுளது பிரசன்னம் நம்மில் இடம்பெற மன்றாடுவோம். அதற்கு தடையாக இருக்கக் கூடிய பாவகாரியங்களை விட்டுவிட முயற்சி செய்வோம். என்ற உறுதியோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆற்றலையும் ஆசியையும் பொழியும் இறைவா, புனிதர் சார்லஸ் பொரோமெயோ எவ்வாறு திருஅவைக்கும் அதன் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்ததுபோல திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் திருஅவையை அன்பு செய்து தொண்டாற்ற அருள்புரிய வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. மன ஒற்றுமையின் இறைவா, திருமணம் என்னும் அருளடையாளத்தின் வழியாக குடும்ப வாழ்க்கை வாழும் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் அனைவரும் ஒருவர் மற்றவரை புரிந்துக்கொண்டு அன்பு செய்து ஒற்றுமையோடும், மகிழ்ச்சியோடும் நல்ல கத்தோலிக்க குடும்ப வாழ்க்கை வாழ வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் இறைவா, இயற்கையின் சீற்றத்தினாலும், தொற்று நோயினாலும், பொருளாதார நெருக்கடியினாலும் துன்பப்படுகின்ற அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். நீர்தாமே அவர்கள்மீது இரக்கம் கொண்டு அனைத்துத் துன்பங்களிலிருந்தும் விடுதலையளித்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

## 07.11.2021 பொதுக்காலம் 32ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. 1அர. 17: 10-16 II. எபி. 9: 24-28 மாற்கு 12: 38-44

அன்பான இறைமக்களே வணக்கம். அன்று இருந்த சூழல் மக்கள் ஒருவரையொருவர் நினைத்த நேரத்தில் அடிக்கடி சந்திக்க, பேச முடியாத நிலை, உறவுகளை வளர்க்க, கருத்துக்களை பரிமாற இயலாது. ஆகவே அவர்களுக்கென உருவான ஆலயங்கள், தொழுகை கூடங்களில் கூடுவது வெறும் வழிபாட்டுக்கு மட்டுமல்ல. மாறாக நலம் விசாரிக்க, தொழில் முறைகள் அறிய, தன் பிள்ளைகளுக்கு, திருமணத்திற்கு பெண் மாப்பிள்ளை தேட. இப்படி பல பரிமாற்றங்கள் செய்ய, மகிழ்ந்து கொண்டாட உதவியாக இருக்க ஏற்படுத்தப்பட்டது. அது மட்டுமல்ல ஆலயங்கள் உருவானது அதன் மூலம் பெரும் காணிக்கைகள் ஏழைகள், மூத்தோர், விதவைகள் மற்றும் தேவையில் உழல்வோருக்கு உதவிடவும் மற்றும் ஆலய பராமரிப்புக்கும் மட்டுமே.

முதல் வாசகத்தில் மிக அருமையாக ஒரு ஏழைக் கைம்பெண்ணிற்கு உதவின சிறப்பு நிகழ்வு விவரிக்கப்படுகிறது. இது கதையல்ல தேவையறிந்து தானாக முன்வந்து உதவிடுதலின் தன்மை. அதே நேரத்தில் தேவையில் உள்ளவர் தன்னிலை உணர்ந்து எப்படி செயல்பட வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது. நற்செய்தியிலும் இதனையே வற்புறுத்துகிறார். ஆலயம் வருவது எதற்காக நம்மிடம் உள்ளதை காட்டி பெருமைப் பாராட்டவா? நான், எனது அன்பியம்,நிறைய செலவு செய்து சிறந்த காணிக்கை அளித்து வழிபாடு நடத்தினோம் என்பதற்காக அல்ல, நம்மிடமுள்ள நல் வார்த்தைகளாலும், நற்செயல்களாலும், நம்மையும் தூய்மைப்படுத்திக் கொண்டு பிறரையும் தூய்மையாக வாழச் செய்யவும், தேவையறிந்து உதவிடவும் இதன் பயனாக நாம் இறை அருள்வளங்களை பெறவுமே. வெறுமனே பலன்களைப் பெற நாம் வேண்டுவது பயனற்றது. ஆகவே நம்மிடமுள்ள தீயச் சுமைகளைக் களைந்து தூயவைகளால் நிறைந்து ஆலய வழிபாடுகளில் இணைந்து பங்கேற்போம். இறைத்திட்டத்தை நிறைவேற்றுவது சாலச் சிறந்தது ஒன்று கூடுவோம், உதவிடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, இறைவனால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட எமது திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் இருபால் துறவியர்கள் அனைவரும் பழையவை களைந்து புதிய ஆடையாம் தூய ஆவியை அணிந்து தேவையில் இருப்போருக்கு உதவிட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. கைம்பெண் செயலே உகந்தது என்றுரைத்த இறைவா, உமது இரக்கச் செயலால் மக்களை ஈர்த்து இறையாட்சிக்கு அழைத்தீர். அதுபோல எம் பங்கு ஆலய மக்கள் அனைவரும் உறவுகளை பெருக்கி ஆலய வழிபாட்டில் பங்கேற்று பலனடையவும் உமது ஆசீர் வழங்கிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. உண்மையும் உயிருமான இறைவா, எங்கள் அனைத்து குடும்பங்களிலும் இறந்து விதைக்கப்பட்ட இருபால் இறைப்பணியாளர்கள் அனைவரின் ஆன்மாக்களும் இறை நிழலில் இளைப்பாற அருள்புரிய வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, உலகம் முழுவதும் உள்ள குடும்பங்களிலும் இறந்து விதைக்கப்பட்ட அனைத்து ஆன்மாக்கள் மேலும் விபத்து, பேரிடர்கள், தற்கொலைகள் இவற்றால் மரணமடைந்த உறவுகள் நண்பர்கள் அனைத்து ஆன்மாக்களுக்கும் நித்திய இளைப்பாற்றியை அளித்து பாதுகாக்க வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

# 09.11.2021 இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

I. எசே. 47: 1-2, 8-9,12 II. 1கொரி. 3: 9-11,16-17 யோவா. 2: 13-22

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழாவினைச் சிறப்பிக்கின்றோம். அகில உலகக் கத்தோலிக்க ஆலயங்களுக்கெல்லாம் தாயாகக் கருதப்படும் இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு விழா இன்றைய நாளின் மிகச் சிறப்பும், பெருமையும் ஆகும். இப்பசிலிக்கா உலகிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் மிகப் பெரியது. "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது தமிழில் ஒரு சிறந்த பழமொழி. தேவாலயம் என்பது இறைவன் தங்கும் இல்லம் இது நமது மூதாதையரின் கருத்து. இத்தகைய அர்த்தமுள்ள பழமொழியைக் கையாண்டு கோவில் செல்லும் பழக்கம் மக்களின் வாழ்வை வளமாக்கும் என்று நம்பிக்கைக்கொண்டு வாழ்ந்தனர். இன்றைய திருப்பலி வாசகங்கள் கோவிலைப் பற்றியவை. எசேக்கியேல் இறைவாக்கினர் பழைய எருசலேம் ஆலயத்தைக் குறிப்பிட்டு, அடையாள மொழியில் அங்கிருந்துப் புறப்பட்டு வந்த தண்ணீர் புனிதரோடும் இணைந்து உடல் என்னும் விலைமதிப்பில்லாத கோவிலை தூய்மையாக வைத்திருக்க அழைப்பு விடுக்கும் இறைவனை நோக்கி நாம் அனைவரும் இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நட்புக்கு இலக்கணம் வகுத்தளித்த இறைவா, நான்தான் உங்களைத் தேர்ந்துக்கொண்டேன் என்று கூறிய உமது திருமகனின் அழைப்பை ஏற்று பணிநியமனம் பெற்றுள்ள திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் பொதுநல சேவையை முழுமனநிறைவோடு செயலாற்ற வேண்டிய அருள்வரங்களை பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. நல்ல தோழமையை ஆசீர்வதிக்கும் தந்தையே, புது ஆட்சியாளர்கள் வாக்குரைத்த அனைத்து நல்ல பல திட்டங்களை செயல்படுத்தவும், அத்திட்டங்கள் மக்களிடம் போய் சேர்ந்து பயன்பெறுகின்றார்களா என்று ஆய்ந்தறிந்து மக்கள் நலனே மகேசனின் நலன் என்று தமிழக ஆட்சியாளர்கள் மனதில் கொண்டு, வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. இயற்கையை எமக்குக் கொடையாக அளித்த மகா வள்ளலே, இயற்கையைப் பாதுகாத்து வளமையாக்கவும், போதுமான மழையைத் தந்து விவசாயம் செழித்தோங்கவும், கால் நடைகள் நோயின்றி வாழவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பிற்கு இலக்கணம் வகுத்த நாயகனே, உலக நாடுகள் ஒற்றுமைக்காகவும், அனைத்து நாடுகளிலும் பரவிவரும் கொடிய

தொற்று நோயை முற்றிலுமாக அகற்றி, மக்கள் அனைவரும் நலமோடும், வளமோடும் வாழ வேண்டிய அருளைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 11.11.2021 தூர் நகர்ப் புனித மார்ட்டின் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்று நம் திருஅவை தூர் நகர் புனித மார்ட்டின் ஆயர் என்ற புனிதரை சிறப்பிக்க நம்மை அழைக்கிறது. புனித மார்ட்டின் இன்றைய ஹங்கேரியின் பொன்னோயா மறைமாவட்டத்தில் சவாரியா என்ற ஊரில் உரோமை போர் படையில் குதிரை படையின் மூத்த அதிகாரியான தந்தைக்கு 316ல் பிறந்தவர். ஒருநாள் மார்ட்டின் குதிரையில் சென்றுக்கொண்டிருந்தபோது அரைகுரை ஆடையுடன் ஒரு பிச்சைக்காரர் குளிரில் நடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து தான் போர்த்தியிருந்த மேலாடையை இரண்டாக வெட்டி ஒரு பாதியை அவரிடம் கொடுத்து போத்திக்கொள்ள செய்தார். மறுபாதியை தன் தோளை சுற்றி போட்டுக்கொண்டார். அன்றிரவு கனவில் மார்ட்டின் பிச்சைக்காரருக்கு கொடுத்த மேலாடை துண்டை இயேசு தன்மீது போர்த்தியிருந்தார். தன்னை சுற்றியிருந்த வானதூதர்களிடம் இதோ இங்கே நிற்பவர் மாட்டின் இவர் இன்னும் திருமுழுக்கு பெறவில்லை. ஆனால் நான் போர்த்தியிருக்கும் ஆடை எனக்கு தந்தவர் இவரே என்று கூறியதும் கனவு கலைந்தது. காலையில் கண்விழித்ததும் தன் பாதி மேலாடை முழு ஆடையாக உருமாறியதை கண்டார்.

இந்நிகழ்ச்சி இவரை முழுவதுமாக மாற்றியது. இவரது மறைப்பணி பிரான்ஸ் நாட்டில் அரங்கேறியது. புனித மார்ட்டின் பெயர் இராணுவத்தோடும், ஆட்சியாளர்களிடமும் தொடர்பு பெற்றது. பிரான்ஸ் நாட்டு குடும்பங்கள் இவரை தன் பாதுகாவலராக கொண்டார். போரில் வெற்றி கிடைத்தது. மன்னன் கிறிஸ்துவ மதத்தை தழுவினார். புனித மார்ட்டின் வேண்டுதலால் இது நடந்தது என்று மன்னர் நம்பினார். கி.பி. 361ல் ஆயர் ஹிலாரியிடம் பணிபுரிந்தார். பின்னர் 371ல் தூர் நகர் ஆயரானார். தூர் நகரத்தில் ஊடுருவியிருந்த பேகனிய சமயம் சார்ந்த கோவில்களை தகர்த்தார். பேகனிய பழக்க வழக்கங்களை ஒழித்தார். ஏழை எளியவர்கள் மது அடிமைகள், குதிரை பயணிகள், படைவீரரர்கள், திராட்சை இரசம் செய்வோர் ஆகியோரின் பாதுகாவலராக திகழ்கின்றார் நம் புனிதர் மார்ட்டின். இவரின் பெயர் கொண்ட பல பள்ளிகள் உலகமெங்கும் உள்ளன. எங்கெல்லாம் மக்கள் கிறிஸ்துவை அறிந்துள்ளார்களோ அங்கெல்லாம் மார்ட்டினையும் அறிந்துள்ளார்கள் என்று ஆயர் யோர்துனாத்துஸ் கூறியதை மனதில் நிறுத்தி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அனைத்துலக அரசரே எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்கன்னியர்கள், மற்றும் திருநிலையினர் அனைவரும் தங்களின் தார்மீக கடமையை உணர்ந்து தங்களது பணியை பக்தியுடனும், விவேகத்துடனும், நேர்மையுடனும், தாழ்ச்சியுடனும், நன்றியுடனும் செயலாற்றிட வேண்டிய மன உறுதியை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகின் உயிருள்ள தந்தையே, உமது காட்சியின் வாயிலாக தன்னை உணர்ந்து உம் பணிக்கென தன்னை ஒப்புக்கொடுத்த புனித மார்ட்டினை போன்று நாங்களும் உம்மில் ஒளிபெற்று ஏழை எளியவர்கள்மேல் இரக்கம் கொண்டு எம்மால் இயன்றவரை உதவும் வரத்தை அருள உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் மருத்துவரே எம் இறைவா, இக்காலச் சூழலில் புதிய நோய்கள் எதும் தோன்றா வண்ணம் தடுத்திடவும், நிலவிவரும் கொடுமையான கொரோனா நோயினை அழித்து, மக்கள் புத்துணர்வோடு தங்கள் கடமைகளைச் செய்யவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 13.11.2021 அருளாளர் ஆர்த்திமெதே சாத்தி திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

அன்பிற்குரியவர்களே, இன்று நாம் நினைவுகூறும் அருளாளர் ஆர்த்திமெதே சாத்தி அவர்கள் இறையாற்றலை உணர்தலுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாவார். தொடக்க காலச் சலேசிய அருட்சகோதரரான இவர், குடும்ப வறுமையின் காரணமாகக் கடுமையான தியாகப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தனது 20ம் வயதில் துறவற மடத்தில் சேர்ந்தபோது இவருக்கு தரப்பட்ட பொறுப்புகளுள், காச நோயால் அவதியுற்று வந்த ஒரு இளங்குருவை கவனித்துக் கொள்ளவேண்டும் என்பதும் ஒன்றாக இருந்தது. இதனால் இவரும் காசநோயால் பாதிக்கப்பட்டார். 1908ல் தமது நித்திய வார்த்தைப்பாட்டை எடுத்துக் கொண்ட சாத்தியை, முதலில் மருந்தகத்தைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பில் அமர்த்தினர். பின்னாளில், அந்த மருத்துவமனை முழுவதும் இவரது பொறுப்பின்கீழ் வந்தது.

நோயுற்றோருக்காக ஆர்த்திமெதே தம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொள்ளும் தாராள உள்ளம் கொண்டார். 1913ல் உருவான புதிய மருத்துவமனைக் கட்டடத்தின் பின்னணியிலிருந்து இவர் கடுமையாக உழைத்தார். 1941ல் மறைமாவட்டத் தலைமையகக் கட்டடத்தை அமைக்க, அந்த மருத்துவமனை இடிக்கப்பட ஆர்த்திமெதே மனமுடையவில்லை. இறை நம்பிக்கையின் பயனால் மீண்டும் ஒரு மருத்துவமனையைக் கட்டி முடித்தார் என்பது வரலாறு. அன்பர்களே, யாரும் உதவி செய்யாத நிலையில்,

தொன் போஸ்கோவைப் போன்றே இறைப் பராமரிப்பில் இருந்தே அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொண்டார் ஆர்த்திமிதி என்பதே உண்மை. இன்றைய வாசகங்கள் கூறுவது போல, இறைவன் நம் தேவைகளை அறிந்து நமக்கு நிறைவேற்றித்தரக் கூடியவராக இருக்கிறார் என்பதை உணர்ந்து, இப்புனிதரின் வழியில் இறைநம்பிக்கை கொள்வது மட்டுமல்லாமல், அந்த நம்பிக்கை தளர்ச்சியடையாமல் இருக்க வேண்டும் என்ற வரத்தை வேண்டி நாமும் இறையன்பின் வடிவமாக மாற நம் அழைப்பினை உணர்ந்தவர்களாய் வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்த்தை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இறைவா, இன்று நாங்கள் நினைவு கூறும் அருளாளர் ஆர்த்திமெதெ சாத்தி போன்று, எம் வாழ்வில் உம்மை எப்போதும் தேடுகிறவர்களாகவும், நீர் எம் உடனிருந்து வழி நடத்துவீர், செயலாற்றுவீர் என்பதை உணர்ந்து, உம்மை முழுமையாகப் பற்றிக் கொண்டு, நீர் எமக்கு காட்டுகிற பாதையில் பயணிக்கும் வரம் தர உம்மை மன்றாடுகிறோம்.

3. கடவுளுக்கு அஞ்சுவதில்லை, மக்களையும் மதிப்பதில்லை என்று நேர்மையற்ற நடுவர் தனக்குள் சொல்லிக்கொள்வதாக இன்றைய உவமை காட்டுகிறது. இவ்வுலகில் கடவுளுக்கு பயப்பாடாமல், மனிதர்களை மதிக்காமல் இருப்பவர்கள் சமுதாயத்தில் நிமிர்ந்த நடையோடு வலம் வருவதை நாங்கள் பெரிதாக நினைக்காமல், எம் ஆன்மாவைக் காத்துக்கொள்ள உமக்கு அஞ்சி நடக்கக் கூடிய வாழ்க்கையை வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 14.11.2021 பொதுக்காலம் 33ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. தானி. 12: 1-3 II. எபி. 10: 11-14,18 மாற்கு 13: 24-32

இறை இயேசுவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் இயேசு கிறிஸ்துவின் இறுதி வருகையைப் பற்றி பேசுகின்றன. இன்று இயேசு கிறிஸ்து மனிதராக உருவெடுத்து மகிமையில் தோன்றுவதையும் இறுதி அரசாட்சி பற்றியும் பேசுகிறார். இன்றைய நற்செய்தி மானிட மகன் "மிகுந்த வல்லமையோடும், மாட்சியோடும் மேகங்களில் வருவது" தானியேல் நூலின் ஒரு பகுதி எதிரொலிக்கிறது. பழைய இஸ்ரயேல் காலத்தில் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் உலக விவகாரங்களைக் கட்டுப்படுத்தும் தெய்வங்களாகக் கருதப்பட்டன. இந்த வானத்திலுள்ள கோள்கள் நமக்கு தொந்தரவு செய்யும் என்று இஸ்ரயேல்

நம்பியது. நற்செய்தி என்ன சொல்கிறது என்றால் இந்த வானத்திலுள்ள கோள்கள் கடவுளின் சக்தியின் கீழ் உதவியற்றவை. பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், விண்மீன் அனைத்தும் மறைந்து போகலாம். ஆனால் இறைவனின் உண்மை, அன்பு மற்றும் நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்.

உலகின் முடிவு என்பது இயேசுவின் சீடர்களுக்கு நல்ல காலம். கடவுள் நம்மை பழிவாங்கப்போதில்லை, மாறாக நம்மீது இரக்கத்தைப் பொழிகிறார். முடிவு என்பதுப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இயேசு கிறிஸ்து இன்றும் நம்முடன் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார். நாம் மரணத்தை வேறு வகையான மறு உலக வாழ்க்கையை கடக்கும்போது அவருடன் ஆழமான உறவில் நுழைவோம் என்பது நிச்சயம். நாம் தவறு செய்யும்போது நாம் மனம் வருந்துகின்றோம் என்றால், அதுதான் இயேசுவின் வருகைக்காக நாம் செய்யும் தயாரிப்பு நம்மை தகுதியுள்ளவர்களாக ஆக்க நமது எண்ணம், சிந்தனை, சொல், செயல் யாவும் தூய்மையாக இருக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. புனிதத்தின் இறைவா, உம் புனித திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்கள் அழைத்தலுக்கேற்ப புனித வாழ்க்கை வாழ்ந்து திருஅவையின் மக்களை மாண்போடும், மகத்துவத்தோடும் வழிநடத்த தேவையான அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேம்.

2. உலகின் கடையெல்லைவரை அரசாள்பவரே, நாடுகளை ஆட்சி செய்கிற தலைவர்கள், தங்கள் நாட்டை நல்லமுறையில் ஆட்சி செய்யவும், மக்களின் நலனுக்காக செயல்படவும், கடவுள் தங்களுக்கு கொடுத்தப் பொறுப்பில் நேர்மையோடும், நீதியுடனும் செயல்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்களின் கண்ணீரைத்துடைப்பவரே, இவ்வுலகில் ஒடுக்கப்பட்டவர்களாக, ஏழைகளாக, அனாதைகளாக, கைவிடப்பட்டவர்களாக வாழும் மக்களின் கண்ணீரையெல்லாம் துடைத்து அவர்களின் வாழ்வு வளம் பெற அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. குற்றங்களை மன்னித்து நோய்களையெல்லாம் குணமாக்குபவரே, மருத்துவமனைகளிலும், இல்லங்களிலும் பல நாட்களாக பல்வேறு வகையான நோய்கள் மற்றும் தொற்று வியாதிகளினால் பாதிக்கப்பட்டு மனம் உடைந்த நிலையில் உள்ள எம் மக்களின் குற்றங்களை மன்னித்து அவர்களின் நோய்களை குணமாக்கி அவர்கள் உம்மோடு இணைந்து கனிதரும் வாழ்வு வாழ அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 15.11.2021 அருளாளர் மதலேன் மொரானோ திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

அன்பிற்குரியவர்களே, 1879ல் தனது முதல் துறவற வார்த்தைப்பாட்டை அளித்து சபையில் சகோதரியாக தன் வாழ்க்கையைத் தொடங்கிய சலேசிய அருட்சகோதரி அருளாளர் மதலேன் மொரானோ கூறிய வார்த்தைகள் அவை. 1880ம் ஆண்டில் தனது இறுதி வார்த்தைப்பாட்டை கொடுத்தபோது அவர் இறைவனிடம் கேட்ட ஒரு அழகிய வரம் இது. சிசிலி நகரிலே பணிபுரிந்த அவர் 1885ல் தூரின் நகரிலிருந்த சலேசிய கன்னியரின் தலைமையகத்தின் தலைவியாக பொறுப்பேற்றார். எத்தனையோ எழுச்சிமிகு பணிகளைப் புரிந்த அருளாளர் அருட்சகோதரி மதலேன் மொரானோ, "என் பணி மறைக்கல்வி போதிப்பதே" என்பதை தன் வாழ்வின் லட்சியமாக கொண்டிருந்தார்.

31 வயதில் துறவறத்தில் சேர முடிவு செய்த அவரது வாழ்க்கை இன்று, துறவறத்தில் இருப்போருக்கும் சரி, இல்லறத்தில் இருப்போருக்கும் சரி சமமான சவாலாக அமைகிறது. இல்லறத்தில் வாழும் பெண்கள் திருஅவையில் ஆற்றக்கூடிய ஆக்கப்பூர்வமான பணிகளைத் தன் வாழ்க்கையால் எடுத்தியம்பி, பின்னர் துறவறம் சேர்ந்து அங்கும் ஒரு உண்மையான துறவி,வாழவேண்டிய முறையை எடுத்துக்கூறும் உதாரணமான வாழ்வு வாழ்ந்தவர் அருளாளர் மொரானோ. கிடைக்கின்ற வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்தி தனது வாழ்வையே மாற்றிய ஒரு மனிதரின் அனுபவத்தை இன்றைய நற்செய்தி வழியாக நமக்கு சொல்லப்படுகிறது. இயேசுவின் வருகைக்காக காத்திருந்த அந்த பார்வையற்ற மனிதன், வாய்ப்பு கிடைத்ததும் அதனை அவன் பற்றிக்கொண்டான்.

வாழ்வில் ஒளியைப் பெற்றுக்கொண்டான். இன்றைய நமது வாழ்க்கை மாற்றம் பெறுவதற்கு ஒரு வினாடி, ஒரு வாய்ப்பு போதும், ஆனால் அதை நல்லமுறையில் பயன்படுத்த நாம் முயலவேண்டும், இது இல்லையே அது இல்லையே என்று குறைபட்டுக்கொண்டே இருந்தால் வாழ்வும் குறைந்துகொண்டே போய்விடும். அன்பர்களே, இன்று நாம் கொண்டாடும் அருளாளர் மதலேன் அவர்கள் எவ்வாறு தனக்கு கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி நிறைவு கண்டாரோ அதே போன்று நாமும் இருப்பதில் நிறைவடைந்து அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி ஆண்டவரைப் போற்றி புகழ்ந்து மனநிறைவடைய வேண்டி தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் தங்களது வாழ்வில் கடவுளின் அன்புச் சட்டத்தை கடைப்பிடிக்க எடுக்கின்ற முயற்சிகளை ஆசீர்வதியும். கடவுளின் சட்டங்களை கடைபிடித்து அவரோடு உறவு நிலையில் வாழும்

வாழ்க்கைமுறையை அமைத்துக்கொள்ள அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஒளியான எம் தெய்வமே இறைவா, எங்களது அகக் கண்களைத் திறந்து, இவ்வுலகைச் சார்ந்த குறுகிய பார்வைகளை அப்புறப்படுத்தி, இறையாட்சியின் பண்புகளை காட்டி வாழ்ந்து காட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அருளாளர் மொரானோ போன்று நாங்கள் நம்பிக்கையோடும் சோர்வில்லாமலும், இறைத்திட்டத்தை அறிந்தவர்களாய் கிடைக்கின்ற வாய்ப்புகளை முழுமையாகப் பற்றிக்கொண்டு நாங்களும் பயன்பெற்று, மற்றவர்கள் வாழ்விலும் ஒளியேற்றும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 18.11.2021 புனிதர்கள் பேதுரு, பவுல் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

கத்தோலிக்க கிறிஸ்தவ வாழ்வில் வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கும் இனிய சகோதரமே, கிறிஸ்துவ நம்பிக்கையின் அசைக்கமுடியாத தூண்களாகத் திகழும் புனித பேதுரு, புனித பவுல் இரு புனிதர்களது பேராலயங்களின் நேர்ந்தளிப்பை திருஅவை ஒரே நாளில் கொண்டாட நம்மை அழைக்கிறது. வரலாற்று சிறப்பு மிகுந்த இந்தப் பேராலயங்கள் உலக மக்களை வெகுவாகக் கவர்ந்திழுக்கும் புகழ் பெற்றத் திருத்தலங்களாகத் திகழ்கின்றன. பேதுரு வரலாற்றை வாழ்வாக மாற்றியவர். வத்திக்கான் மலையில் தன்னைத் தலைக்கீழாக சிலுவையில் அறையுங்கள் எனக் கேட்டு மீட்பராம் இயேசுவுக்கு மாட்சிமை தந்தவர். அதே மலையில் அவர் கல்லறைமீது கி.பி. 83ம் ஆண்டு திருத்தந்தை அனனாகளிட்டாசு என்பவரால் நினைவாலயம் கட்டப்பட்டது. கி.பி. 319ம் ஆண்டு பேரரசர் கான்ஸ்டான் டைன் அவர்களால் பேராலயம் கட்டப்பட்டது. 16ம் நூற்றாண்டில் உலகப் புகழ்பெற்ற மைக்கேல் ஆஞ்சலோவின் வடிவமைப்பில் பேராலயம் அமைக்கப்பட்டது. புகழ்பெற்ற முதல் மற்றும் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கங்கள் இந்தப் பேராலயத்திலேயே நடைபெற்றன. இன்றும் விழாநாள்கள், புனிதர்பட்டம் அறிவிப்பு புதன்கிழமை மறைப்போதகம், ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மூவேளை செப உரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருத்தூதர் பவுல், கால்வியன் பகுதியில் நீரோ பேரரசனால் வாளால் தலை வெட்டப்பட்டு இறந்தார். புனித பேதுரு பேராலயத்திலிருந்து ஏழு மைல் தொலைவிலுள்ள ஓஸ்தியா பாதையில் கால்வியன் எனப்படும் இடத்தில்தான் புனித பவுல் தலை வெட்டப்பட்டார். ஆனால் இவருடைய உடல் கால்வியானிலிருந்து இரண்டு மைல் தொலைவில் தள்ளி லூசினா என்ற பெண்மணியின் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. கல்லறைமீது திருத்தந்தை புனித கிளீற்றஸ் சிறிய நினைவு தளம் அமைத்தார். கி. பி. 324ம் ஆண்டு பேரரசர் கான்ஸ்டான்டைன் ஆலயம் கட்டினார். கி.பி. 395ம்

ஆண்டு 400 அடி நீளமுள்ள ஆலயம் கட்டப்பட்டது. இதற்கு "தியடோசியன் பேராலயம் எனப் பெயர் சூட்டப்பட்டது. இது தீ விபத்துக்குள்ளாகி புதுப்பிக்கப்பட்டு திருத்தந்தை 9ம் பத்திநாதரால் 1854ம் ஆண்டு அன்னை மரியா அமல உற்பவத்தை பிரகடணம் செய்தபின் டிசம்பர் 10ம் நாள் புனிதப்படுத்தி நேர்ந்தளித்தார். நாமும் அந்த ஆலயங்களாக மாறி மூவொரு இறைவன் நமது ஆண்டவரை தோலில் கொண்டு, மெசியாவை ஏற்று கிறிஸ்துவாக வாழ்வோம் என உறுதியெடுத்து பக்தியுடன் இத்திருப்பலயில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. "நீரே மெசியா என்றென்றும் வாழும் இறைவனின் மகன்" என இயேசுவின் பிரதிநிதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர்கள், பொதுநிலையினர் அனைவரும் நம்பிக்கை வாழ்வில் கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வது நானல்ல கிறிஸ்துவே வாழ்கிறார் என வாழ வழிகாட்டிய இறைவா, நாங்கள் நம்பிக்கையில் நிலைத்து நின்று புனித பேதுரு, புனித பவுலைப்போல வாழவும், நிலையான வாழ்வைத்தரும் ஆவிக்குரிய வழியில் செல்லவும், வாழ்வில் ஏற்படும் வறுமை, பிணி, கடன் தொல்லைகளிலிருந்து விடுபடவும் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. தூயவரான எம் தந்தையே இறைவா, அர்ப்பண வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து, உமது அழைப்பின் மேன்மையை உணர்ந்து வாழ்ந்துக்காட்டவும் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.11.2021 கிறிஸ்து அரசர் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. தானி. 7: 13-14 II. திவெ. 1: 5-8 யோவே. 18: 33-37

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று நாம் கிறிஸ்து அரசர் பெருவிழாவினைக் கொண்டாடுகின்றோம். சிலுவையில் பாவ பரிகாரமாக மரித்தவர் எப்படி அரசராக இருக்க முடியும், சிந்திப்போம். இவ்வுலகின் அரசன் என்றால், ஒரு குறிப்பிட்ட நாடு, இடம், மக்கள், படைபலம், ஆட்சி அதிகாரம் கொண்டிருப்பான். தன் மக்களுக்கு உணவு கொடுத்து, எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பு வழங்குவது அரசனது கடமை. இப்படியிருக்க இயேசுவுக்கு எந்த நாடு, எந்த மக்கள், என்ன அதிகாரம், ஆட்சியின் காலம், மக்களைக் குறித்த கடமைகள் என்ன? இயேசு இஸ்ரயேல் குலத்திற்கு மட்டும் அரசரா? இல்லை

அகில உலகிற்கும் அரசரா? என்று என்னும்போது, "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றதல்ல, அது இவ்வுலக ஆட்சிப் போன்றதாய் இருந்திருந்தால் நான் யூதர்களிடம் காட்டிக் கொடுக்கப்படாதவாறு என் காவலர்கள் போராடியிருப்பார்கள். ஆனால் என் ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல" என்றார் (யோவா. 18:36)

"நான் உண்மையின் அரசர், எனது ஆட்சி உண்மையின் ஆட்சி, அது கண்களுக்கு புலப்படாது என்பதை மறைமுகமாக (யோவா. 18:37) பதில் தருகிறார். உண்மையைச் சார்ந்தவர்களே அவரது மக்கள். உண்மையின் மக்கள் எங்கெல்லாம் பரவிக்கிடக்கிறார்களோ அதுவரை அவரது ஆட்சியின் எல்லை. "அவரது ஆட்சிக்கு முடிவே இராது" (லூக். 1:30) பிறப்பிலேயே அரசராக பிறந்தவர் (மத். 2:2). எல்லா பகைவரையும் அடிபணிய வைக்கும்வரை கிறிஸ்து ஆட்சி செய்தாக வேண்டும். (1கொரி.15:25). படைப்பு அனைத்திற்கும் இவர் பேரரசர். அரசருக்கெல்லாம் அரசர், ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவர், இவர் அன்பின் அரசர், அமைதியின் அரசர், நீதியின் அரசர், இரக்கத்தின் அரசர்.

மாண்பும் மகத்துவமும் நிறைந்த விண்ணகப் பேரரசர் என்று சொல்லிக் கொண்டே போகலாம். அந்தளவிற்கு உயர்ந்தவர். காரணம் படைப்பு அனைத்திற்கும் மீட்பை அருளும் ஒரே பேரரசர் இவரைத் தவிர வேறு எவருமில்லை. தம் அரசின் மகத்துவத்தையும், தாம் அரசர் என்பதையும் இயேசு பல உவமைகளில் விளக்கியுள்ளார். சிறப்பாக தாலந்து உவமை, கொடிய குத்தகைக்காரர் உவமை, விருந்து உவமை, தாவீதின் மகன் பற்றிய விளக்கம் இவைகளில் நாம் காண முடியும். விண்ணக அரசின் மக்களாக அழைக்கப்பட்ட காலம் தம் அரசரைப் பணிந்து அவரது ஆட்சிக்கு உகந்த மக்களாக வாழ நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம். எப்போதும் உண்மையே சார்ந்து நின்று சான்று பகர வரம் வேண்டுவோம். கீழ்ப்படிதலே நம் அரசருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாகும். அதற்கான அருளை வேண்டி இப்பலியில் உருக்கமுடன் ஒப்புக்கொடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **திருஅவைக்காக:** திருஅவையின் அரசராக வீற்றிருக்கும் இறைவா, உமது பணியாளர்கள் தங்களின் கடமைகளை உணர்ந்து, உம் மந்தையை நடத்திச் செல்லும் அவர்கள் அனைவருக்கும் தூய ஆவியாரின் வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. **நாட்டிற்காக:** அனைத்துலகின் மீதும் அதிகாரம் உள்ள இயேசுவே, நாடுகளின் தலைவர்களுடைய அதிகாரம் உம்மிடமிருந்தே வருகிறது. அவர்களின் இதயமும் உம் கரங்களில் உள்ளது. அவர்கள் மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாக, அமைதியை உலகில் ஏற்படுத்தும் காரணிகளாக விளங்கிட உம்மை மன்றாடுகிறோம்.

3. **பங்கு குடும்பத்திற்காக:** குடும்பங்களின் தலைவராகிய இயேசுவே, பங்கு என்ற பெரிய குடும்பத்திலுள்ள, அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதிக்கவும், அனைத்து மக்களும் உமக்குக் கீழ்ப்படிந்து நன்றியுணர்வுடன் வாழ நல்ல உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. **துன்புறுவோருக்காக:** எளியோரின் நலன் காக்கும் அரசரே இறைவா, ஏழ்மை, வறுமை, நோய், பிணிகளால் வருந்துவோரையும், முதுமை, தனிமையில் வாடுவோரையும் நம்பிக்கையோடு உமது உதவியை எதிர்ப்பார்த்து காத்திருப்போரையும் உமது பாதம் படைக்கின்றோம். உமது கருணை நிறைந்த பார்வையால் இவர்கள் வாழ்வடைய அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 23.11.2021 புனித முதலாம் கிளமெண்ட் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

இறையேசு கிறிஸ்துவின் அன்புள்ள இறைமக்களே, இன்று நாம் புனித முதலாம் கிளமெண்ட் அவர்களின் நினைவு நாளை சிறப்பிக்க ஒன்று கூடியுள்ளோம். இவர் புனித பேதுருவுக்குப் பின் மூன்றாவது திருத்தந்தை. இவர் யூத சமயத்திலிருந்து பின்னர் கிறிஸ்தவராக மாறியவர். இவர் பல திருமுகங்களை எழுதியுள்ளார். கிறிஸ்தவர்களிடையே நிலவ வேண்டிய அமைதி, ஒற்றுமை இவற்றை வலியுறுத்தி எழுதியுள்ளார். "அன்பு நம்மை இறைவனுடன் இணைக்கிறது. அதில் தாழ்வானதோ, செருக்கானதோ, இல்லை. அன்பு பிரிவினை என்பதை அறியாது, எதிர்க்காது, இறைவனால் தேர்ந்துக்கொள்ளும் அனைவரும் இந்த அன்பின் பொருட்டு முழுமை பெறுகின்றனர்" புனித பவுலைப்போல் இவரும் அன்பின் மகத்துவத்தை விளக்குவதை இதன் மூலம் அறியலாம்.

திருத்தந்தை புனித அனக்ளிடசுக்கு பிறகு கி.பி. 88 முதல் 100ம் ஆண்டுவரை திருஅவையின் தலைவராக புனித கிளமெண்ட் இருந்தார். பேரரசனான தி ராஜன் இவரை நாடு கடத்தினான். கிரிமியா என்னுமிடத்தில் இவர் சலவைக்கல் வெட்டும்படியாக வற்புறுத்தப்பட்டார். இங்கு இண்டாயிரம் கிறிஸ்தவர்கள் இருந்தனர். அவர்கள் இவரை தந்தையாகவும், மேய்ப்பனாகவும் மதித்தனர். உடனே அரசன் இவரை செர்சனிஸ் என்னும் நாட்டிற்குக் கடத்தி கழுத்தில் ஓர் இயந்திரக் கல்லைக் கட்டி இவரை கடலில் தள்ளினான். உரோமையில் இவர் வாழ்ந்த இல்லமானது ஆலயமாக மாற்றப்பட்டுள்ளது. இவரது விழா நவம்பர் 23ம் தேதி கொண்டாடப்படுகிறது. தமிழ்பேசும் கத்தோலிக்கரால் "புனித சாந்தப்பர்" என இவர் அழைக்கப்படுகிறார். "நான் பேதுரு, பவுல் போல் அதிகாரமாக பேசவில்லை. ஏனெனில் அவர்கள் திருத்தூதர்கள்" என தமது குருக்களுக்கு மரியாதை கொடுப்பதையும் உணர முடிகிறது. இன்றைய

விழாவை சிறப்பிக்கும் நாம் தாழ்ச்சி என்னும் புண்ணியத்தையும், அன்பு என்னும் பண்பினையும் நாமும் பெற்றிட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் அனைத்து மறைப்பணியாளர்களையும் தூய ஆவியின் வல்லமையால் ஆசீர்வதித்து, திருஅவையை வழிநடத்த வேண்டிய அருளையும், ஞானத்தையும் தரவேண்டுமென்றும், இவர்களுக்கு வேண்டிய நல்ல ஆன்ம உடல் சுகம் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஒளியாம் இறைவா, நாங்களும், புனித கிளமெண்ட் திருத்தந்தையைப்போல இறைவனின் திருவுளப்படி நடந்திட எங்களை வலுப்படுத்தும். இறுதிவரை உண்மைக்காகவும், நேர்மைக்காகவும் முழுமையாக எங்களை அர்ப்பணிக்கும் நல்ல மனதை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. ஞானத்தின் இருப்பிடமே இறைவா, இன்றைய காலக்கட்டத்தில் சூழ்நிலைகளால் மாணவ மாணவிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைகள்மாறி மீண்டும் அவர்கள் உற்சாகத்துடனும், ஞானத்துடனும் படிக்கும் சக்தியை தந்தருள வேண்டுமென்றும், இவர்களை வழிநடத்தும் ஆசிரியர்களுக்கு நல்ல உடல் உள்ள நலனைத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் உம்மை மன்றாடுகிறோம்.

## 28.11.2021 திருவருகைக் கால முதல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. T. சாம்சன்

I. எரே. 33: 2-6 II. 1தெச. 3: 12-4: 2 லூக். 21: 25-28, 34-36

இறையேசுவின் இனிய இறைமக்களே, இன்று நாம் திருவருகைக் காலத்தின் முதல் வாரத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். கிறிஸ்துவின் பிறப்பை அர்த்தமுள்ளதாக கொண்டாட தயாரிக்கும் காலமே இக்காலம். இயேசுவின் இரண்டாம் வருகையோடு தொடர்புப்படுத்தி இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு வழங்கப்படுகின்றன. கிறிஸ்து பிறப்பு விழாவின் முன்னறிவிப்பை உணர்த்துவதால் இது அருளின் காலம் என அழைக்கப்படுகிறது. கிறிஸ்து பிறப்பு விழாவை மகிழ்வான முறையில் கொண்டாட நாம் ஆயத்தமாக இருந்தாலும் நம்மை சந்திக்க வரும் கிறிஸ்துவின் விருப்பத்தை நிறைவேற்ற நாம் தயாராக இருக்கிறோமா என்று சிந்திப்போம். ஏனென்றால் நம் வாழ்விலும் பல குழப்பங்களும் பிரச்சனைகளும் ஏற்படும்போது குறிப்பாக இந்த காலக்கட்டத்தில் கொரோனா என்னும் கொடிய நோயால் பாதிக்கப்பட்டு வேதனைப்படும் மக்களையும் உண்ண உணவும், உறைவிடமும், உடுக்க உடையுமின்றி வறுமையில் வாடும் மக்களின் துயர் நீக்க நமக்கு விழிப்புணர்வு தேவை. நம் வாழ்வில் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளை நாம் ஆராய்ந்து அவற்றை

ஒழுங்குப்படுத்த நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நாம் நம்முடைய தனிப்பட்ட வாழ்வையும் குடும்ப உறவுகளையும் ஆழமாக உணர்ந்து விழிப்புடன் வாழ இயேசு விடுக்கும் அழைப்பை ஏற்று செயல்படுவோம். இயேசு கிறிஸ்துவின் பிறப்பை சிறப்பான விதத்தில் கொண்டாட தயாராகியுள்ள நாம் பிறருக்கு நம்மாலான உதவிகளை அன்போடும் நட்போடும் செய்ய வேண்டும் என்ற மன உறுதியோடு இந்த திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வின் வழியாகிய எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இந்த கொரோனா காலத்தில் மக்களை பாதுகாக்க, செபிக்க உமதருளாசீரை நிறைவாக அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. உறவாடும் எம் தெய்வமே, உழைக்காதவன் உண்ணலாகாது என்ற பழமொழிக்கேற்ப உழைப்பிருந்தும் ஊதியம் கிடைக்காமலும், உழைப்பே இல்லாமல் ஒரு வேளை உணவுகூட கிடைக்காமல் அல்லல்படும் உம் பிள்ளைகளை கண்நோக்கும். அவர்களுக்கு தேவையான நல்ல உணவையும், தகுதிக்கேற்ற வேலையும் கிடைக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நலம் தரும் நாயகனே எம் இறைவா, உடல் நலம் மற்றும் மனநலம் குன்றியோரை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைகளிலும், வீடுகளிலும், வீதிகளிலும், முதியோர் இல்லங்களிலும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரையும் நீர்தாமே தொட்டு குணப்படுத்தி நலம்பெற்று உம்மை மகிமைப்படுத்த வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. பாதுகாக்கும் பரம்பொருளே எம் இறைவா, உலகெங்கிலும் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்கொடுமைகளான கொலை, கொள்ளை, வழிபறி, கற்பழிப்பு, கடத்தல் போன்ற அநீதிகளை நடத்திவரும் கூட்டத்தினரை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் மனம்மாற வேண்டுமென்றும், அநீதிகளை மக்கள் தட்டிக்கேட்டு அவர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய துணிவை நீர்தாமே தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 30.11.2021 புனித அந்திரேயா திருத்தூதர் விழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

அன்புள்ளம் கொண்ட இறைமக்கள் அனைவருக்கும் புனித அந்திரேயா விழா வணக்கங்களும், வாழ்த்துக்களும். இவர் இறை இயேசு காலத்தவர் புனித பேதுருவின் அண்ணன் மீனவர் கலிலேயா கடற்கரையோரம் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர். ஏற்கெனவே

திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்தவர். இறை இயேசுவை இவர்தான் மெசியா என சுட்டிக் காட்டியதும் தனது தம்பியை அழைத்துக்கொண்டு போய் சீடரானவர். இவர் இறையேசுவின் விண்ணேற்புக்கு பின் துருக்கி சென்று அவர்களிடமும் சித்தயர்கள் எனப்படுகிறவர்களிடமும் மறைப்பரப்பு பணிகளில் ஈடுபட்டார். புனித ஸ்டாக்கிஸ் என்பவரை இவர் முதல் ஆயராக பைசான்சியம் நகருக்கு திருநிலைப்படுத்தினார். பின் மாசிதோனியா கிரேக்கம் சென்று பணிகள் புரிந்தார். நீரோவின் கொடுங்கோல் ஆட்சியில் பத்ராசு எனும் ஊரில் இவரது 60வது வயதில் ஓ வடிவில் அமைந்த சிலுவையில் அறைந்தான். ஆனால் அறைப்பட்டு இருந்த நிலையிலேயே இரண்டு நாட்கள் மக்களுக்கு தான் அனுபவித்த அன்புச் சுவையினை போதித்தவாறே மறைச் சாட்சியாக தன்னை ஈந்தார்.

இவரது உடல் கான்ஸ்டான்டைன் நோபிளுக்கு கொண்டு வரப்பட்டு புனித லூக்கா, திமொத்தேயு கல்லறை அருகில் அடக்கம் செய்யப்பட்டது. இவரது புனித பண்டங்கள் இன்றுவரை இத்தாலியிலுள்ள அமால்பி நகரில் புனிதமாக பாதுகாக்கப்படுகிறது, இவர் ரஷியா போலந்து நாடுகளுக்கு பாதுகாவலர். இவரது இனிய இறை சுவையை அறிய நாம் ஒன்றை நோக்க வேண்டும். கொலை களத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டபோது தமக்காக காத்திருந்த புனித சிலுவையை அடையாளங்கண்டு "எனக்காகத் தயாரிக்கப்பட்ட உன்னை பல காலமாக எதிர்நோக்கி காத்திருந்தேன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் முழு நம்பிக்கையுடன் உன்னை நெருங்கி வருகிறேன். இதற்கு முன் என் ஆண்டவரை சுமந்தாய் மகிழ்வுடன் இப்போது என்னையும் ஏற்றுக்கொள் என்றாராம். என்ன பற்றுறுதி வீரம் சிறிதும் கலங்காமல் தன்னை அர்ப்பணித்த புனிதர் இவரைப்போல் உலகெங்கும் நம்பிக்கை அறிக்கையிட்டு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் திருஅவைக்கு திருத்தந்தை முதல் மற்ற எத்தனையோ அருட்பணியாளர்களை அழைத்திருக்கிறீர் இவர்கள் அனைவரும் இப்புனிதரைப் போல் இறை சுவையறிந்து உணர்ந்து அச்சுவையை உலகிற்கு அளிக்க வேண்டிய அத்துனை ஆற்றல் வலிமை தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு தந்தையே இறைவா, எங்கள் குடும்பத்தில் இறைப்பற்று அற்றிருக்கும் இருண்ட உள்ளங்களில் அவ்வுணர்வை கொடுத்து அவர்களும் அதனை உணர்ந்து வாழவும் பிறருக்கும் அளித்து மகிழவும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. அரசரே இறைவா, உமது அரசாட்சி மலர வேண்டும் உலகிலுள்ள அனைத்து நாடுகள் மக்கள் உமது இறையாட்சியில் இணைய வேண்டும். மகிழ்வின் போரொலி எங்கும் ஒலிக்க வேண்டும்.

அன்பு, அமைதி, ஒற்றுமை, சாதானம் நிறைந்தவர்களாக வாழ உமதருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## இயேசுவே நம் அரசர்

திரு. P. விக்டர்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை மீட்பதற்காக வந்த மீட்பர் மட்டுமல்ல, அவர் நமது அரசராகவும் இருக்கின்றார். இயேசு இவ்வுலகில் பிறந்த அந்த நாட்களில் வாழ்ந்த யூத மக்கள் உரோமைப் பேரரசின் ஆளுகைக்குட்பட்ட ஆட்சியின்கீழ் அடிமை வாழ்வு வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கென ஒரு அரசர் இல்லை. ஆனால் தங்களை விடுவிக்க ஒரு அரசர் வருவார் என்று எதிர்நோக்கி வாழ்ந்து வந்தனர். இத்தகைய எதிர்ப்பார்ப்பு மிகுந்த சூழலில்தான் இயேசு புரட்சியான கருத்துக்களைச் சொல்லி மக்களின் நோய்களிலிருந்து விடுதலை வழங்கி வந்தார். இவரது செய்கைகளையும், வார்த்தைகளையும் கேட்ட மக்கள், இவர்தான் தங்களை விடுவிக்க வந்துள்ள "அரசர்" என்று நம்பினர். "ரபீ, நீர் இறைமகன், நீரே இஸ்ரயேல் மக்களின் அரசர்" (யோவா.1:4) என்று நத்தனியேல் கூறுவதிலிருந்து இதைப் புரிந்துக்கொள்ள முடிகிறது. அதனால்தான் தலைமை குருக்களும், ஆயர்களும், சதுசேயர், பரிசேயர் அனைவரும் அவரது உரைகளை கவனமுடன் கேட்டனர். ஆனால் இயேசுவோ, அரசியல் விடுதலைப்பற்றி பேசாமல், ஆன்மீக விடுதலைக் குறித்து மட்டுமே பேசியதாலும் தலைமைப் பொறுப்பில் இருக்கும் தங்களுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டியதாலும் அவரை வெறுக்கத் துவங்கினர். அந்த வெறுப்புதான் இயேசுவின் சிலுவை மரணத்திற்கு காரணமாய் அமைந்து விட்டது.

**இயேசு உண்மையிலே அரசர் தானா? இதே கேள்வியைத்தான் ஆளுனன் பிலாத்தும் இயேசுவைக் கேட்டார் (யோவா.18:33)**

அதற்கு இயேசு "என் அரசு இவ்வுலக அரசு போன்றதல்ல" (யோவா. 18:36) என்று கூறுவதிலிருந்து, அவர் அரசர்தான், ஆனால் அவரது அரசு இவ்வுலக அரசு போன்றதல்ல, என்று கூறுகிறார். இதை அவர் சொல்வதற்குக் காரணம், நாம் யாவரும் இவ்வுலகைச் சார்ந்தவர்கள் அல்ல, நமது தாய் நாடு விண்ணகம் (பிலி. 3:20). நம்மை இந்த விண்ணக அரசுக்கு உரியவர்களாக உருமாற்ற வந்தவர்தான் இந்த இயேசு. இயேசு ஒரு குறிப்பிட்ட மதத்தை உருவாக்க வரவில்லை. ஆனால் மக்களுக்கு தனது விண்ணக அரசைப்பற்றி எடுத்துரைத்து அந்த அரசிற்குள் நுழைவதற்கும், நாம் எப்படி வாழவேண்டுமென்று கற்றுக் கொடுக்க வந்தார். ஒரு புதிய வாழ்க்கை முறையை சொல்லிக் கொடுக்க வந்தார். அந்த புதிய வாழ்க்கை முறையை விளக்கும் கையேடுதான் "திருவிவிலியம்". முதன் முதலில் கடவுளின் அரசையும் அவரது நீதியையும் தேடுங்கள் (மத். 6:33) என்று இயேசு கூறுவதிலிருந்து அவருக்கு ஒரு அரசு

உண்டு என்பது விளங்குகிறது. மேலும் இயேசு தனது சீடர்களிடம், எனது ஆட்சி வரும்போது நீங்கள் எல்லாரும் பந்தியில் அமர்ந்து குடிப்பீர்கள், அரியணையில் அமர்வீர்கள் (லூக். 22:30) என்று கூறுவதிலிருந்து விரைவில் அவரது அரசாட்சி நடக்கப்போகிறது என்பது விளங்குகிறது.

இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர் (பிலி. 2:10). ஏனெனில் இவர் மண்ணுலகில் உள்ள அரசர்களுக்கெல்லாம் தலைவர், (திவெ.1:5) உலகின் ஆட்சியுரிமை நம் ஆண்டவருக்கும் அவருடைய மெசியாவுக்கும் உரியதாயிற்று (திவெ.11:15). அரசருக்கெல்லாம் ஆண்டவர் என்ற பெயர் அவருடைய ஆடையிலும் தொடையிலும் எழுதப்பட்டிருந்தது (திவெ.19:16) போன்ற திருவிவிலிய சான்றுகளிலிருந்து இயேசு நமது அரசர்தான் என்பது திட்டமும் தெளிவுமாக விளங்குகிறது.

ஒரு அரசர் என்றால் அவருக்கு மூன்று முக்கிய கடமைகள் உண்டு. முதலாவது தனது மக்களை எதிரியிடமிருந்து பாதுகாக்கும் பணி. இரண்டாவது தனது நாட்டு மக்கள் சுகமாய் வாழ அமைதி, நீதி, சமத்துவம் போன்றவை நிலைக்கச்செய்து மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுப்பது. மூன்றாவது மக்கள் உயிர்வாழ உணவு, தண்ணீர் தாராளமாக கிடைக்கும்படி அவர்களை வாழவைப்பது, இம்மூன்றும் ஒவ்வொரு அரசருக்குள்ள அதிமுக்கியமான கடமைகளாகும். இம்மூன்றையும் நமது வாழ்வில் இருக்கச் செய்து நமது ஒப்பற்ற அரசராக இயேசு விளங்குகிறார்.

**இயேசு அரசரின் பாதுகாப்பு** "இதோ நான் உலகம் முடியும்வரை உங்களோடு இருக்கிறேன்" என்று சொல்லி (மத். 28:20) நம்மைவிட்டு விலகாமல் நம்மைப் பாதுகாக்கிறவராக இயேசு நம்மோடு உள்ளார். இவ்வுலகில் நமக்குள்ள ஒரே எதிரி "தீயோன்" அல்லது "பிசாசு". நமக்கு எதிரான விதிகள் பலகொண்ட "கடன் பத்திரத்தை அரசராகிய இயேசு கிறிஸ்து தனது இரத்தத்தை விலையாகக் கொடுத்து தீயோனிடமிருந்து பிடுங்கி அழித்துவிட்டார். தீயோனுக்கு நம்மேல் எவ்வித அதிகாரமும் இல்லாமல் செய்து விட்டார் (கொலோ. 2:14) நமக்கு வலுவூட்டுவதற்காக தூய ஆவியை நமக்காக வரவழைத்து, நம்மோடு தங்கியிருக்கும்படி செய்தார். அதுமட்டுமல்ல, நமது அரசர் இயேசுவின் பெயரால் தீயோனை விரட்டுவதற்கும் நமக்கு அதிகாரம் வழங்கியுள்ளார் (மாற்கு 16:17) இவ்வாறாக நமது அரசர் இயேசு நம்மைப் பாதுகாக்கிறார்.

**இயேசு அரசரின் பராமரிப்பு:** நம்மை நீதியின் பாதையில் நடத்தி, நேர்மையைக் கற்றுக்கொடுத்து நல்ல குடிமக்களாக வாழ உதவி செய்கிறார். "பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவைக் குறித்து நம்மைக் கண்டித்து உணர்த்தி நல்வழிப்படுத்துகின்றார் (யோவா. 16:8). நமது அரசர் நமது பாவங்களைச் சுமந்தார், நாம் பாவங்களுக்காக செத்து நீதிக்காக வாழவே இவ்வாறு செய்தார். அவர்தம் காயங்களால் நாம் குணமானோம் (1பேதுரு 2:24) நோய்களிலிருந்து மட்டுமல்ல, நமக்குண்டான எல்லாவித சாபங்களிலிருந்து நமக்கு விடுதலைப் பெற்றுக்கொடுத்துள்ளார் (கலா.

3:13) நம் அரசர் இயேசு. "என்னுடைய அமைதியையே தருகிறேன், இது உலகம் தரும் அமைதி போன்றதல்ல, (யோவா. 14: 29) என்று கூறி தமது அமைதியை நமக்கு வழங்கி நம்மை பராமரிக்கிறார். ஒரு புதிய சமுதாய புரட்சியை உருவாக்குகிறார். நமக்கு எதிராகக் குற்றம் புரிந்தோரை மன்னித்து அவற்றை மறக்க வேண்டுமென்று சொன்ன நம் அரசர் இயேசு எதிரிகளுக்காக மன்றாடவும் நம்மை சபிக்கிறவர்களுக்காக ஆசியும் கூற வேண்டுமென்று சொல்லி ஒரு புதிய இறை சமுதாயத்தை உருவாக்கி பராமரிக்கின்றார்.

**இயேசு அரசரின் பகிர்ந்தளிப்பு:** இவ்வுலகில் மனிதன் உயிர்வாழ உணவு அவசியம். ஆனால் ஆண்டவராக நமது இயேசுவின் அரசில் அவருக்கு ஏற்புடைய மக்களாக வாழ இவ்வுலக உணவு போதாது, அவரது திருவசனம் இறைவார்த்தை நமக்கு உணவாய் இருந்து நம்மை ஊக்கப்படுத்துகிறது. நாம் ஆண்டவருக்கு ஏற்புடைய மக்களாக வளர வேண்டுமானால், வஞ்சகமற்ற வார்த்தையான ஞானப்பாலை அருந்த ஆர்வம் மிக்கவர்களாய் இருக்க வேண்டும் (1பேதுரு 2:3). இது நமது ஆன்மீக வாழ்வு தொடக்க நிலையிலேயே நின்றுவிடாமல் நல்ல முதிர்ச்சி நிலையை அடைய முயற்சி எடுக்க வேண்டும். ஒரு உயர்ரக ஆன்மீக வாழ்வை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். "கண்ணுக்குக் கண்" என்பதை மாற்றி மன்னிக்க வேண்டும். விபச்சாரம் செய்வது குற்றம் என்பது மாறி, ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கினாலே விபச்சாரம் என்கிற உயர்நிலை ஆன்மீகத்தில் ஈடாக வேண்டும்.

பகைவருக்குப் பகை என்பது மாற்றமடைந்து பகைவரையும் அன்பு செய்ய இயேசு அரசர் கற்றுத்தருகிறார். மேலும் சபிக்கிறவனுக்கு ஆசியும் தீமை செய்கிறவர்களுக்காக மன்றாடவும் நம்மை வேண்டுகிறார். தனது "இறைவார்த்தை" என்கிற உணவினால் நமக்கு உணவூட்டி நம்மை அவரது அரசருக்குரிய தகுதியான, உண்மையான மக்களாக உருவாக்குகிறார். இவ்வாறு தன்னுடையதெல்லாம் நமக்கு பகிர்ந்தளித்து நம்மை உருவாக்குகிறார், உருமாற்றுகிறார். இந்த அரசரின் ஆட்சியில் இருப்பதைப் பெருமையாகக் கருதுவோம், இவரோடு இணைந்து வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம். இந்த அரசரின் ஆட்சிக்கு நம்மை விட்டுக்கொடுப்போம், வாழ்க நம் இயேசு அரசர்.

## இறப்பு என்பது முடிவல்ல...

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

பிறப்பு என்றால் இறப்பு உண்டு. அது உறுதி. அதுவே உலக வாழ்வின் இறுதி. வாழ்வு நிலையற்றது, பிறக்கின்றவர்கள் இறந்தாக வேண்டும், இது இயற்கையின் விதி. சுவாசிக்கும் காற்று இறைவனின் கொடை (எசா. 42:5). வாழ்வு குறுகியது (யோபு 14:1, திபா. 37:26) மறையும் புகைப்போன்றது. நிழலைப் போன்றது (திபா. 144:4) வாழ்வு நாட்கள் குறைந்து விடுகின்றன (தொ.நூ. 6:3, சீராக் 16:9, திபா. 90:10). பிறக்கின்றபோதே இறக்கின்ற தேதி இருக்கின்றதென்பது மெய்தானே

எனும் கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகளுக்கேற்ப வாழ்வின் முழுமை என்பது. படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தனை வணங்க (எசா. 38:19, தொ.நூ. 2:9, 3:22-24, எரே. 10:10) யாவே உயிர் கொடுத்து (தொநூ. 2:7) பாதுகாப்பவர்.

உயிர் என்பது இறைவன் கொடுத்த பரிசு. (யோபு 12:10, இச. 32:39) அவரே வாழ்வின் ஊற்று (1சாமு. 25:29) வாழ்வு என்பது இறைத்திட்டம். மனிதரில் நிறைவேறுவது (இச. 8: 3,4:1, 16:24, 16:20, 30:6) வாழ்வு என்பது யாவே இறைவனைத் தேடுவது (ஆமோ. 5: 4-6) தீயதை, பாவத்தை விலக்கி நல்லதைப் புண்ணிய வாழ்வைத் தேடுவது. நம் பிறப்பை ஒட்டியதுதான் இறப்பு. இறப்பு என்பது இறுதியல்ல, புதிய வாழ்வுக்கான நுழைவாயில். சாகா வரம் வேண்டித்தான் மனித இனமே, கடவுளின் படைப்புக்களே துடிக்கின்றன. திருத்தூதர் பவுல் சொல்வார், "இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை என நான் எண்ணுகிறேன். இம்மாட்சியுடன் கடவுளின் மக்கள் வெளிப்படுவதைக் காண்பதற்காகப் படைப்பே பேராவலோடு காத்திருக்கிறது" (உரோ. 8:18-19). இந்தப் படைப்புகளின் வேட்கையை இயேசுவின் உயிர்ப்பு நிறைவு செய்கிறது.

நம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்பது இறப்பு, வாழ்வுக்கு அழுத்தம் கொடுப்பது இறப்பு, வாழ்வின் உந்து சக்தியும் இறப்பு, நமது வாழ்வின் இனத்தின் தொடக்கமும் இறப்பே. இறுதி நாளில் இறப்பை எப்படி சந்திக்கிறோமோ அப்படி வாழ்ந்துள்ளோம் என்பது பொருள். இறப்பை மனமகிழ்ச்சியோடு, மனநிறைவோடு ஏற்றுக்கொள்ளும் மனிதன் இவ்வுலக வாழ்வை ஆண்டவர் எதிர்ப்பார்க்கும் விதத்தில் வாழ்ந்துள்ளான், புது வாழ்வுக்குத் தன்னைத் தயாரித்துள்ளான் என்பது வெளிப்படுகிறது. இயேசுவின் பார்வையில் இறப்பு ஒரு திருமுழுக்கு, புதுவாழ்வின் தொடக்கம், இயேசு ஒவ்வொரு சாவையும் வாழ்வின் உதயமாகக் கண்டார். இவர்களின் இறப்பு கடவுளின் மாட்சி வெளிப்படும் நிகழ்வாகக் காண்கிறார் (யோவா. 11:4) பன்னிரெண்டு வயது சிறுமியை உயிர்பெறச் செய்தபோது விலகிப்போங்கள், சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறார் (மத். 9:24) என்றபோது, இறப்பை புத்துயிர் பெற உறங்கி விழிக்கும் அன்றாட நிகழ்வாகக் காண்கிறார். அதனால்தான் தூய பவுலடிகளார் கூறுவார், வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கு உரியவர்கள்.

இந்த இறப்பு என்பது மரணம், மரணம் என்பது இறைவன் தந்தது அல்ல, மாறாக மனிதர்களாகிய நாம், நமது பேராசையால், கீழ்ப்படியாமையால் நம்மேல் நாமே வரவழைத்துக்கொண்டது. மனிதன் சாகவேண்டும் என்று கடவுள் விரும்பவில்லை. மாறாக சாவை, சாபத்தை மனிதனே விரும்பித் தன்மேல் வரவழைத்துக்கொண்டான். ஆம், நமது பேராசையால், கீழ்ப்படியாமையால் நம்மேல் நாமே வரழைத்துக் கொண்டது.

இந்த மரணம் பாவத்தின் சம்பளம் (உரோ. 6:23). எனவே சிலுவையில் அறையுண்ட மெசியாவை உற்று நோக்கி, தீயதை விலக்கி, நன்மையை நாடுவோம் (எசே. 33:11). முடிவில்லா வாழ்வை, மரணமில்லாத வாழ்வை, வான்வீட்டை நமதாக்கிக் கொள்வோம். மறுவாழ்வு உண்டு என்ற நம்பிக்கையிலே.

## அருளாளர் ஆர்த்திமெதே சாத்தி மற்றும் மதலேன் மொரானோ வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

### அருளாளர் ஆர்த்திமெதே சாத்தி

**தொன் போஸ்கோவின் சலேசிய வாழ்க்கைக்கு ஒரு சவால்:** ஆர்த்திமெதே சாத்தி இத்தாலியில் பிறந்தவர், பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வளர ஆரம்பித்தவர், ஒரு கட்டத்தில் அவர் தனது பள்ளிப்படிப்பையே நிறுத்திவிட்டுக் குழந்தைத் தொழிலாளியாகப் பணியாற்ற வேண்டியதாயிற்று. பிழைப்பிற்காக தன் பெரியப்பாவின் அழைப்பை ஏற்று அர்ஜென்டீனாவிற்கு சாத்தியின் குடும்பம் குடியேறியது. அப்போது ஆர்த்திமெதேக்கு 7வயது. ஒரு சிறிய கடையை வைத்து அதில் அவரது தந்தை பணியில் இருந்தார். ஒரு உணவு விடுதியில் வேலைக் கிடைத்தது அந்த வேலையை செய்தபோதும் சாத்திக்கு அந்த சூழ்நிலை ஒத்துவரவில்லை. ஆகவே அதைவிட்டு செங்கல் சூளைக்கு வேலையில் சேர்ந்தார்.

**வாழ்வின் துளிர் முளைக்கின்றது:** தினமும் காலையில் ஆலயத்தில் சென்று ஆண்டவரை வழிபடுவதில் என்றுமே அவர் தவறுவதே கிடையாது. சாத்தி கள்ளம் கபடமற்ற தெள்ளிய உள்ளம் கொண்டவர், இறை வழிபாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவர். குறிப்பாக அவர் ஒவ்வொருவரிடமும் அன்புடனும் நட்புடனும் பழகினார். கிடைக்கின்ற நேரத்தில் ஆலயத்திற்கு சென்று அங்குள்ள தேவையான பணிகளில் ஈடுபாடு காட்டியதால் அவருக்கு மன நிறைவும் மகிழ்வும் நிறைய கிடைத்தது.

**சலேசியராக ஓர் அழைப்பு:** தொன் போஸ்கோவின் எளிமையான இனிமையான வாழ்வு இவரை ஈர்த்தது. துறவற வாழ்வுக்கு நுழைய விரும்பினார். பெற்றோரும் ஆசி வழங்கி அனுப்பினர். 20 வயதில் சாத்தி இறைவன் தன்மீது கொண்ட கருணைக்காக நன்றியாக, பெர்னால் குருமடத்திற்குச் சென்றார். இறை அழைத்தலை முழுவதுமாக உணர்ந்தார், மகிழ்ச்சியோடு அதை ஏற்று வாழ்வதற்கு தயாரானார்.

**தியாக அர்ப்பணம்:** இளங்குருவானவர் ஒருவர் காச நோயினால் மிகவும் துன்புற்றிருந்தார். அவரை பராமரிக்க சாத்தி கேட்டுக்கொள்ளப்பட்டார். அதன்விளைவாக அவருக்கும் அந்நோய் பரவியது. அந்நாட்களில் இந்நோய்

ஒரு கொடிய தொற்று நோயாகக் கருதப்பட்டதால் குருவானவராகத் திருநிலைப்படுத்தப்படுவது தடை செய்யப்பட்டது. மறுநாள் காலை அவருடன் பயின்றவர்கள் துறவு ஆடையை பெற்றுக்கொள்ளும் சடங்கு நடந்தது. ஆனால் சாத்தியோ படுக்கையில் இருந்தார். அவரது நெடுங்கால கனவு ஏமாற்றமாக மாறியதே என்ற வேதனை ஒருபுறம் ஆனால் சாத்தி அனைத்தையும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார்.

**சகாய அன்னையிடம் வாக்குறுதி:** மருத்துவரான அருட்பணி கரேனோ, சாத்தியை பரிசோதித்து, பிறகு ஆலயத்திற்குள் தேவ அன்னையின் பீடத்தின் முன் முழந்தாள் படியிட செய்து, "நான் முழு குணமடைந்தால், வாழ்நாளெல்லாம் ஏழை நோயாளிகளுக்காக என் வாழ்வை அர்ப்பணிப்பேன்" என வாக்குறுதிக் கொடுக்க பணித்தார். சாத்தியும் அவ்வாரே மகிழ்வோடு வாக்குறுதிக் கொடுத்தார். கரேனோவின் வாக்கு உண்மையானது. மரியாளின் உதவியால் நலம்பெற்ற சாத்தி தன் முதல் வார்த்தைப்பாட்டினை 1908ம் ஆண்டிலும் நித்திய வார்த்தைப் பாட்டினை 1911ம் ஆண்டிலும் எடுத்தார். தேவ அன்னைக்கு கொடுத்த வாக்குறுதிப்படி நோயாளிகளைக் கவனிப்பதற்காகத் தீவிரமாகப் பணியாற்றத் தொடங்கினார். 1913ல் அருட்பணி கரேனோ மறைவுக்குப் பின் மருத்துவமனையின் முழுப்பொறுப்பினையும் சாத்தி எடுத்துக்கொண்டு அதிகாலை முதல் இரவு 11 வரை எப்போதுமே நோயாளிகளின் அழைப்பை ஏற்றுப் பணிவிடை செய்து வந்தார்.

**இறுதியாக:** "இளையோர், நோயுற்றோர், ஏழை எளியவர்களுக்கு பணி செய்ய வேண்டும், கடவுளின் ஆசீரும் நல்லவர்களின் உதவியும் உங்களுக்குக் கிடைக்கும்" என்று தொன் போஸ்கோ கூறிய வார்த்தைகளைச் சாத்தி தன்னுடைய உள்ளத்தில் ஏற்று நோயுற்றோரை கவனிப்பதே தன்னுடைய ஆன்மீகப் பயணம் என்று தன் இறுதி மூச்சு வரை கடைப்பிடித்தார். இறுதி நாட்களில் எந்தவித அச்சமோ கலக்கமோ இன்றி, தன் மரணச் சான்றிதழை தானே எழுதிவைத்த மாமனிதர் சாத்தி. திருப்பலியும் செப மாலையும் அவர் விரும்பிய பக்தியின் வெளிப்பாடுகள். "பணிவிடை பெற அல்ல பணிவிடை புரிவதற்கே" பிறந்த சாத்தியின் மறைவு, சலேசிய வாழ்க்கைக்கு ஒரு பெறும் இழப்பு. 2002ல் திருஅவை இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தியது. ஆர்த்திமெதே சாத்தியின் வாழ்வு ஒவ்வொரு சலேசியருக்கும், பொதுநிலையினருக்கும் புனித வாழ்விற்கு வழிகாட்டியாகும்.

## அருளாளர் மதலேன் மொரானோ

**"என் பணி மறைக்கல்வி போதிப்பதே":** சகாய அன்னையின் புதல்வியர் சபையைச் சார்ந்த இவ்வருட்சகோதரி 1847ம் ஆண்டு நவம்பர் 15ம் நாள் பிறந்தார். 14 வயதிலேயே ஒரு பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்த

இவர் இயற்கையிலேயே நல்ல ஆசிரியைக்கு உண்டான குணங்களைக் கொண்டவராக திகழ்ந்தார். 17 வயதில் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டயத்தைப் பெற்ற ஆசிரியையாக நியமிக்கப் பெற்றார். பங்கில் மறைக்கல்வி எடுப்பதிலும் பல்வேறு பக்த சபைகளில் உதவுவதிலும் பெரும் பங்கெடுத்தாள். தனிப்பட்ட வாழ்வில் ஒறுத்தலையும் மற்றவருக்கு உதவுவதையும் இறைவன் தந்த அழைப்பாக ஏற்று வாழ்ந்தார்.

**இலட்சியத்தின் முதல் படி :** தனக்கு 30 வயது நிரம்பியபோது, தன் சேமிப்பு அனைத்தையும் ஒன்று சேர்த்து தன் தாயிடம் தந்து, அவர் வெகு நாளாய் கண்ட கனவின்படி ஒரு இல்லம் அமைத்துக் கொள்ளச் சொன்னார். தாயின் மகிழ்ச்சி எல்லைக்காணாது முகத்தில் சிரிப்பாய் மலர்ந்து, மறைவதற்கு முன்பே மற்றொரு செய்தியைக் கூறினார் மதலேன். தான் ஒரு துறவியாக வேண்டுமென்று விரும்புவதாக கூறினார்.

**சலேசிய அருட்சகோதரியாக :** தனது 31ம் வயதில் சபையில் சேர முடிவு செய்த மதலேன், மிகுந்த மகிழ்ச்சிடைந்தாள். 1879ல் தனது முதல் துறவற வார்த்தைப்பாட்டை அளித்து சபையில் சகோதரியாக தன் வாழ்க்கையைத் தொடங்கினார்.

**சலேசிய அருட்சகோதரிகள் தலைமை தலைவி :** அருட்சகோதரி மொரானோ 1880ம் ஆண்டிலேயே தனது இறுதி வார்த்தைப்பாட்டையும் கொடுத்தார். அத்தருணத்தில் அவர் இறைவனிடம் கேட்ட ஒரு அழகிய வரம் இது "இறைவா நான் புனிதையாகும் முன் என்னை சாக விடாதேயும்".

**பணியில் தனக்குண்டான ஈடுபாடு :** 1881ல் அவர் சிசிலி சென்ற போது 2 இல்லங்கள், 7 கன்னியர்கள், 2 துறவற மாணவிகள் என்றிருந்தது, 1908ல் அவர் இறந்தபோது 18 இல்லங்கள், 12 ஆரட்டரிகள், 6 பள்ளிகள், 5 ஆரம்பப் பள்ளிகள், 11 பயிற்சிக் கூடங்கள், 4 மாணவியர் விடுதிகள், 142 கன்னியர்கள், 29 துறவற மாணவியர்கள் என்ற நிலைக்கு உயர்ந்தது. எத்தனையோ எழுச்சிமிகு பணிகளைப் புரிந்த அருட்சகோதரி மதலேன் மொரானோ, "என் பணி மறைக்கல்வி போதிப்பதே" என்று கூறுவார்.

**இறுதியாக :** 31 வயதில் துறவறத்தில் சேர முடிவு செய்த அவரது வாழ்க்கை இன்று, துறவறத்தில் இருப்போருக்கும் சரி, இல்லறத்தில் இருப்போருக்கும் சரி சமமான சவாலாக அமைகிறது. இல்லறத்தில் வாழும் பெண்கள் திருச்சபையில் ஆற்றக்கூடிய ஆக்கப்பூர்வமான பணிகளைத் தன் வாழ்க்கையால் எடுத்தியம்பி, பின்னர் துறவறம் சேர்ந்து அங்கும் ஒரு உண்மையான துறவி, வாழ வேண்டிய முறையை எடுத்துக்கூறும் உதாரணமான வாழ்வு வாழ்ந்தார். தலைமைத்துவத்தில் இருந்தும், கனிவான. பணிவான சகோதரியாய், புனிதையாய் வாழ்ந்தார். உண்மையிலேயே தான் செபித்தது போலவே புனிதையாக வாழ்ந்த பிறகே இறந்தார். இதை அங்கீகரித்து திருஅவை நவம்பர் 5, 2004 அன்று அவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தியது சிறப்புக்குரியது.

# திருஅவைச் செய்திகள்

திருத்தொண்டர். சுரேஷ் இயேசுபாலன் ச.ச.

வணக்கத்துக்குரிய இறையடியாராக போற்றப்படும் திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் அவர்கள் அருளாளராக அறிவிக்கப்படுவதற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இசைவளித்தார். 1978ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26ம் தேதி கத்தோலிக்கத் திருஅவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 33 நாள்களுக்குப்பின் செப்டம்பர் 28ம் தேதி இறையடி சேர்ந்த திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் அவர்களை அருளாளராக உயர்த்தும் வழிமுறைகளுக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அக்டோபர் 13 இசைவளித்துள்ளார்.

## புனித யோசேப்பு யூபிலி ஆண்டின் கனிகள்

நாம் செய்யும் காரியங்களில் தெளிவு பிறக்காத நேரங்களிலும் கூட, கடவுளின் திட்டத்தின்படி நடப்பதற்கு, அவரில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்றுரைத்த கர்தினால் தாக்லே அவர்கள், கடவுள் நம்மிடம் ஒப்படைத்த மக்களின் நல்ல பாதுகாவலர்களாக நாம் வாழ வேண்டுமென்றும் கூறினார். புனித யோசேப்பிடமிருந்து மௌனத்தின் மதிப்பைக் கற்றுக்கொள்கிறோம் எனவும் கூறிய கர்தினால், அப்புனிதரின் நம்பிக்கை வாழ்வு உலக ஆயர்கள் மாமன்றத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நமக்கு, ஒன்றிணைந்து பயணிக்க உந்துதல் தருகின்றது.

## ஒருங்கிணைந்த பயணம் என்பதே திருஅவையின் வாழ்வு முறை

"மாமன்றம்" என்ற சொல்லின் உட்பொருளான, "ஒன்றிணைந்து பயணித்தல்" என்பதே, அதனைத் தெளிவாகச் சொல்கிறது. இந்தப்பயணம் தூய ஆவியாருக்குப் பணிந்து நடப்பதால் கிடைக்கும் கனியாகும். இந்தப் பயணத்தில் அனைவருக்கும் ஒரு பங்கு உள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். 16வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் தயாரிப்புப் பணிகள் உலகளவில் இரண்டு ஆண்டுகள் நடைபெறும். இவை 2021ம் ஆண்டு அக்டோபர் 10ம் தேதியிலிருந்து 2023ம் ஆண்டு அக்டோபர் வரை நடைபெறுகின்றன. 2022ம் ஆண்டு ஏப்ரல் வரை மறைமாவட்ட அளவிலும், 2022ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து, 2023ம் ஆண்டு மார்ச் வரை கண்டங்கள் அளவிலும் இத்தயாரிப்புப் பணிகள் நடைபெறும்.

## "மேய்ப்புப் பணியாளரும், இறையியலாளருமான பிரான்சிஸ்"

"மேய்ப்புப்பணியாளரும், இறையியலாளருமான பிரான்சிஸ்" என்ற தலைப்பில், திருத்தந்தையின் எண்ணங்களை மையப்படுத்திய ஒரு நூலை வத்திக்கான் பதிப்பகம் வெளியிட்டது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கியுள்ள உரைகளிலும் எழதியுள்ள நூல்கள், மற்றும் மடல்களிலும் வெளிப்படும் இறையியல் மற்றும் மேய்ப்புப் பணிசார்ந்த

சிந்தனைகளை, ஸ்பெயின் நாட்டின் பார்சலோனாவில் உள்ள Sant Pacia பல்கலைக்கழகத்தில் 2019ம் ஆண்டு நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், பல அறிஞர்கள் பகிர்ந்துக்கொண்டனர். இந்தக் கருத்தரங்கில் பகிர்ந்துக் கொள்ளப்பட்ட உரைகளைத் தொகுத்து, "மேய்ப்புப்பணியாளரும், இறையியலாளருமான பிரான்சிஸ்" என்ற நூலை வத்திக்கான் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

**பாகிஸ்தானில் சிறுபான்மையினருக்கு வேலைவாய்ப்பு**

பாகிஸ்தானில் சட்ட ரீதியாக சிறுபான்மை சமுதாயத்தினருக்கென ஒதுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பணியிடங்கள் காலியாக உள்ள விவகாரம் குறித்து, அந்நாட்டு ஆயர் பேரவைத் தலைவரான ராவல் பிண்டி பேராயர் ஜோசப் ஹர்ஷத் அவர்கள், செய்தி நிறுவனங்களிடம் கருத்து தெரிவித்துள்ளார். சிறுபான்மை சமுதாயத்தினரை, பெரும்பான்மை சமுதாயத்தினரோடு ஒருங்கிணைத்தல் மற்றும் அவர்களின் நிதிநிலைமையை தன்னிறைவுப் பெறச் செய்தல் ஆகிய இரு நோக்கங்களுக்காக, பாகிஸ்தான் சட்டத்தில், சிறுபான்மை சமுதாயத்தினருக்கு 5 விழுக்காடு வேலைவாய்ப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**போபால் உயர் மறைமாவட்டத்தின் புதிய பேராயர்**

கந்துவா மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றும் அலங்காரம் ஆரோக்கிய செபாஸ்டின் துரைராஜ் அவர்கள், போபால் உயர்மறை மாவட்டத்தின் பேராயராக நியமனம் செய்யப்பட்டார். இந்தியாவின் போபால் உயர்மறைமாவட்டத்தின் பேராயர் லியோ கொர்னேலியோ அவர்கள் பணி ஓய்வு பெற சமர்ப்பித்த விண்ணப்பத்தை அக்டோபர் 4ம் தேதியன்று ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தற்போது கந்துவா மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றும் அலங்காரம் ஆரோக்கிய செபாஸ்டின் துரைராஜ் அவர்களை, அப்பொறுப்பில் நியமித்துள்ளார். 1957ம் ஆண்டு தமிழ்நாட்டில் மதுரைக்கருகே, திருநகரில் பிறந்த அலங்காரம் ஆரோக்கிய செபாஸ்டின் துரைராஜ் அவர்கள் இறைவார்த்தை துறவுச் சபையில் இணைந்து 1985ம் ஆண்டு தன் 28வது வயதில் அருள்பணியாளராக அருள்பொழிவு பெற்றார். 2009ம் ஆண்டு தன் 52வது வயதில் கந்துவா மறைமாவட்ட நியமிக்கப்பட்ட ஆரோக்கிய செபாஸ்டின் துரைராஜ் அவர்கள், 12 ஆண்டுகள் அப்பணியை நிறைவு செய்து தற்போது, போபால் உயர் மறைமாவட்டத்தின் பேராயராகப் பொறுப்பேற்கிறார்.

## சுடர் வாசகர் போட்டி - 78 சரியான விடைகள்

1. காசநோயினால் பாதிக்கப்பட்டு, 24ஆம் வயதில் இறந்தார்
2. அருளாளர் மைக்கேல் தொன் ரூவா
3. புனித யூதா, ததேயு, புனித சின்ன யாகப்பர்
4. 84வது வயதில் கிரேக்க நாட்டிலுள்ள "ப்யோசர்" என்னும் இடத்தில்
5. அருளாளர் அகுஸ்தின் தேவாரம் பரம்பில்
6. 13ம் சிங்கராயர்
7. ஆல்பர்ட் மர்வெல்லி
8. கார்மேல்
9. ஓர் ஆன்மாவின் வரலாறு
10. அருளாளர் தொன் மைக்கேல் ரூவா
11. புனித இரண்டாம் யோவான் பவுல்
12. கி.பி. 65-85
13. அருளாளர் அலெக்சாண்ரீனா மரியா தா கோஸ்தா
14. ஆல்பர்ட் மர்வெல்லி
15. பாடுபட்ட சுருவத்தைப் பார்த்து

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Sr. Maria Theresa, Manali New Town, Cheenai

Sr. Jeya Sekari, Chennai

Mrs. Mariammal, Tindivanam

## சுடர் வாசகர் போட்டி - 79

1. போபால் உயர்மறைமாவட்டத்தின் புதிய ஆயர் யார்?
2. அருளாளர் ஆர்த்திமெதே சாத்தி எந்த ஆண்டு திருநிலைப் படுத்தப்பட்டார்?
3. "இதற்கு முன் என் ஆண்டவரை சுமந்தாய், இப்போது என்னையும் ஏற்றுக்கொள்" கூறியது யார்?
4. புனித சாந்தப்பர் என அழைக்கப்படுபவர் யார்?
5. புனித பேதுரு எந்த மலையில் கொல்லப்பட்டார்?
6. அருளாளர் ஆர்த்திமெதே சாத்தி அதிகமாக எந்தப் பணியில் ஈடுபட்டார்?
7. "நான் போர்த்தி இருக்கும் ஆடை இவர் தந்தது" யார் யாரிடம் கூறியது?
8. "தூய்மையின்றி எவரும் ஆண்டவரை காணமாட்டார்கள்" திருவிவிலியத்தில் எங்குள்ளது?
9. "புனித யோசேப்பிடமிருந்து மௌனத்தின் மதிப்பை கற்றுக் கொள்கிறோம்" கூறியது யார்?
10. இயேசுவின் அரசில் வாழ எந்த உணவு நம்மை ஊக்கப்படுத்தும் என்று ஆசிரியர் கூறுகிறார்?
11. "ஓ" வடிவ சிலுவையில் அறைப்பட்டவர் யார்?
12. இயேசு தாம் அரசர் என்பதை மூன்று உவமைகளில் கூறுவதாக ஆசிரியர் கூறுகிறார். அது எந்த உவமைகள்?
13. "இறைவா நான் புனிதையாவதற்கு முன் என்னை சாகவிடாதேயும்" யார் கூறியது?
14. புனித தூர் நகர் மார்டின் யார் யாருக்கு பாதுகாவலர்?
15. "கடவுளது பிரசன்னத்தில் வாழ பெரும் முயற்சிகள் செய்" இது யாருடைய வாக்கியங்கள்?


**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

புனித பிரான்சிஸ் சவேரியார் இந்தியாவின் பாதுகாவலர்
திருவருகைக் கால இரண்டாம் ஞாயிறு
கன்னி மரியாவின் அமல உற்பவம் பெருவிழா
புனித ஜான் டியேகோ கௌற்லாற்றோயாற்சின்
புனித முதலாம் தமசுஸ்
திருவருகைக் கால மூன்றாம் ஞாயிறு
திருவருகைக் கால நான்காம் ஞாயிறு
புனித பீட்டர் கனிசியுஸ்
கான்டி நகர்ப் புனித ஜான்
கிறிஸ்து பிறப்பு பெருவிழா
திருக்குடும்பம் விழா
புனித யோவான் திருத்தூதர் நற்செய்தியாளர்
புனித மாசில்லாக் குழந்தைகள்
முதலாம் சில்வெஸ்டர் திருத்தந்தை

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

இயேசு பிறந்தது நம்மை மீட்கவா? அல்லது தந்தையை நமக்கு காட்டவா?
புதிய வருடத்தை வரவேற்கும் நள்ளிரவு ஆராதனை
அருளாளர் பிலிப்பு ரினால்டி - வாழ்வு தரும் பாடம்
திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை நவம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
(சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## நவம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | தி | **புனிதர் அனைவரின் பெருவிழா** | **I.** திவெ. 7: 2-4,9-14<br>**II.** 1யோவா. 3: 1-3 | மத். 5:1-12 |
| 2 | செ | **இறந்த நம்பிக்கையாளர்களின் - நினைவு** | **I.** சாஞா. 3: 1-9<br>**II.** உரோ. 5: 5-11 | யோவா.6: 37-40 |
| 3 | பு | புனித மார்ட்டின் தெ போரஸ் | உரோ. 13: 8-10 | லூக். 14: 25-33 |
| 4 | **வி** | புனித சார்லஸ் பொரோமெயோ - நினைவு | உரோ. 14: 7-12 | லூக். 15: 1-10 |
| 5 | வெ | | உரோ. 15: 14-21 | லூக். 16: 1-8 |
| 6 | ச | | உரோ. 16: 3-9,16, 22-27 | லூக். 16: 9-15 |
| 7 | **ஞா** | **பொதுக் காலத்தின் 32ம் ஞாயிறு** | **I.** 1அர. 17:10-16<br>**II.** எபி. 9: 24-28 | மாற்கு 12: 38-44 |
| 8 | தி | | சாஞா. 1: 1-7 | லூக். 17: 1-6 |
| 9 | செ | **இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு** | **I.** எசே. 47: 1-2,8-9,12<br>**II.** 1கொரி. 3: 9-11,16-17 | யோவா. 2:13-22 |
| 10 | பு | புனித பெரிய லியோ | சாஞா. 6: 1-11 | லூக். 17: 11-19 |
| 11 | **வி** | தூர் நகர்ப் புனித மார்ட்டின் | சாஞா. 7: 22-8:1 | லூக். 17: 20-25 |
| 12 | வெ | புனித ஜோசபாத்: ஆயர், மறைச்சாட்சி | சாஞா. 13:1-9 | லூக்.17: 26-37 |
| 13 | ச | | சாஞா. 18: 14-16, 19: 6-9 | லூக். 18: 1-8 |
| 14 | **ஞா** | **பொதுக் காலத்தின் 33ம் ஞாயிறு** | **I.** தானி. 12:1-3<br>**II.** எபி. 10: 11-14,18 | மாற்கு 13: 24-32 |
| 15 | தி | புனித பெரிய ஆல்பர்ட்: ஆயர் | 1மக்.1:10-15,41-43,54-57,62-64 | லூக். 18: 35-43 |
| 16 | செ | ஸ்காட்லாந்து நாட்டுப் புனித மார்கரெட் | 2மக். 6:18-31 | லூக். 19: 1-10 |
| 17 | பு | அங்கேரி நாட்டுப் புனித எலிசபெத் | 2மக். 7: 1,20-31 | லூக். 19:11-28 |
| 18 | **வி** | புனிதர்கள் பேதுரு, பவுல் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு: திருத்தூதர்கள் | 1மக். 2: 15-29 | லூக். 19: 41-44 |
| 19 | வெ | | 1மக். 4: 36-37,52-59 | லூக். 19: 45-48 |
| 20 | ச | | 1மக். 6: 1-13 | லூக். 20:27-40 |
| 21 | **ஞா** | **கிறிஸ்து அரசர் பெருவிழா - பொதுக் காலத்தின் 34ம் ஞாயிறு** | **I.** தானி. 7: 13-14<br>**II.** திவெ. 1: 5-8 | யோவே18:33-37 |
| 22 | தி | புனித செசிலியா | தானி. 1: 1-6,8-20 | லூக். 21: 1-4 |
| 23 | செ | புனித முதலாம் கிளமெண்ட்: திருத்தந்தை | தானி. 2: 31-45 | லூக். 21: 5-11 |
| 24 | பு | புனிதர்கள் ஆண்ட்ரூ டுங் லாக் | தானி. 5:1-6,13-14,16-17,23-28 | லூக். 21:12-19 |
| 25 | **வி** | அலெக்சாந்திரியா நகர் புனித கத்தரின் | தானி. 6: 11-27 | லூக். 21: 20-28 |
| 26 | வெ | | தானி. 7: 2-14 | லூக். 21: 29-33 |
| 27 | ச | | தானி. 7: 15-27 | லூக். 21: 34-36 |
| 28 | **ஞா** | **திருவருகைக் கால முதல் ஞாயிறு** | **I.** எரே. 33: 14-16<br>**II.** 1தெச. 3: 12-4:2 | லூக். 21: 25-28, 34-36 |
| 29 | தி | | எசா. 4: 2-6 | மத். 8: 5-11 |
| 30 | செ | புனித அந்திரேயா: திருத்தூதர் விழா | உரோ. 10: 9-18 | மத். 4: 18-22 |